Regd. No. M. 1930

ஓம்
வந்தேமாதரம்.

Annual Subscription Rs. 2

# கிராமானுகூலன்.

# GRAMANUKULAN.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]

KUMBAKONAM.

REGISTRAR OF ... 24 JAN 1928 ... MADRAS

புத்தகம் 2 | 1927ஆம் டிசம்பர்—1928ஆம் ஜனவரிமீ
பிரபவஆம் கார்த்திகை—மார்கழிமீ | ஸஞ்சிகை 3

## விஷய சூசிகை.


| | பக்கம் |
|---|---|
| 1. கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரை மசோதா (பத்திராதிபர்) | 33 |
| 2. காங்கிரஸ் ... .... ,, | 35 |
| 3. ரீ செட்டில்மெண்டு டைக்ளாட் ரிஜிஸ்டர் ,, | 35 |
| 4 ஆயுர்வேத ஆஸ்பத்திரியும் கும்பகோணம் தாலூகா போர்டாரும் ,, | 35 |
| 5. கல்வி வரி ... ... ,, | 36 |
| 6. மருதாந்தநல்லூர் தேவஸ்தானம் ,, | 36 |
| 7. இந்திரேசன் அனுபந்தம் ,, | 36 |
| 8 கிராம பஞ்சாயத்துகள் (ஸ்ரீமான் M R சாம்பசிவய்யர், B A.,) | 37 |
| 9. இந்திய ஆட்சி முறை (ஓர் இந்தியமாணவர்) .... | 41 |
| 10. தொண்டர் (ஸ்ரீமான் வ. சா வெங்கடராமய்யர்) ... | 45 |
| 11. தற்கால நிலைமை (ஓர் சம்பாஷணை) (ஸ்ரீமான் S M இராஜகோபால அய்யங்கார்) .... | 49 |
| 12 கர்ணங்களின் மகஜர் ,, | 53 |
| 13. பிராகதார்களின் குறைகள் ,, | 55 |
| 14 விளம்பரங்கள் ... | 56—58 |


### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டுக்கு வருட சந்தா [தபால்கூலி உள்பட] ... ரூ | 2 | 0 | 0 |
| வெளிநாடுகளுக்கு ,, ,, ,, | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி ,, ,, ,, | 0 | 3 | 0 |

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| பக்கம் 1க்கு [2-கலம்] மீ 1க்கு ரூ. 10 | காலம் ½க்கு மீ 1க்கு ரூ. 2-8-0 |
| பக்கம் ½க்கு [1-கலம்] ,, 5 | இஞ்சு 1க்கு ,, அணா 8 |

நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

# கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்.

ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்,

## கிராமானுகூலன்.

### சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு „ | ... 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | .... 25 | 0 | 0 |
| வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன். | ... 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினங்கு, மோரீஸ், நேட்டால்) | .... 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

## நல்ல லாபம்.

நமது கிராமானுகூலனுக்கு மூன்று சந்தாதாரர்களை சேர்த்து முன்பணமாக ரூபாய்-6 மணியார்டர் செய்பவர்களுக்கு ஒரு வருஷத்துக்கு கிராமானுகூலன் பத்திரிகை இனமாக அனுப்பப்படும். அதற்குமேல் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த கமிஷனும் கொடுக்கப்படும்.

மானேஜர்,
கிராமானுகூலன்.

உ

ரிஜிஸ்டர் நெ. M. 1930] வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா 2—0—0

# கிராமானுகூலன்.

[ ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை. ]

" ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும் "—பாரதி.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை

| புத்தகம் 2 | பிரபவ ௵ கார்த்திகை-மார்கழி ௴ | சஞ்சிகை 3 |
|---|---|---|

## கிராம உத்தியோகஸ்தர்களின் பரம்பரை மசோதா.

(x)

ஸ்ரீமான் எஸ் முத்தையா முதலியாரால் கொண்டுவரப்பட்டு தனிக்கமிட்டியின் பரிசிலனையிலிருக்கிற ஹெடி மசோதாவை உருக்குலைத்துவிட சூழ்ச்சிகள் நடப்பதாகத் தெரியவருகிறது. மசோதாவை ஒப்புக்கொண்டு அதன் உட்பிரிவாக 5-வருஷங்களுக்கு முந்தி வேலையில் சாசுவதமாய் இருப்பவர்களுக்குமட்டும் பரம்பரை பாத்தியமுண்டு என்று சிலரும் 2 வருஷங்களுக்கு முந்தி வேலையில் சாசுவதமாயிருப்பவர்களுக்கு மட்டும் பரம்பரை பாத்தியம் உண்டு என்று சிலரும் திருத்தம் செய்துவிடவேண்டுமென்று அபிப்பிராயப்படுவதாக தெரியவருகிறது இதனால் மசோதாவின் உண்மையான நோக்கம் பாதிக்கப்பட்டு விடக்கூடியதாயிருக்கிறது மாகாணம் முழுவதும் ஒரேமாதிரியாயிருந்து வரவேண்டியது அவசியமாகும் என்ற முக்கிய நோக்கம் காற்றுவாக்கில் பறந்துபோகிறது. இதைப்பிரித்து கணக்கு பண்ணுவது அதைவிட கெடுதலாகவே முடியும். ஒருவட்டத்தில் கர்ணம் பரம்பரை பாத்தியமுள்ளவராயும் அதேவட்டத்தில் கிராமபெரியதனக்காரர் பரம்பரை பாத்தியமில்லாதவராயும் மற்றொரு வட்டத்தில் கிராமபெரிய தனக்கார் பரம்பரை பாத்தியமுள்ளவராயும் கர்ணம் மேற்படி பாத்தியமில்லாதவராயும் ஏற்படக்கூடும். இதற்கு தஸ்தாவேஜிகள் ஏற்படுத்த ஒருதனி டிபார்ட்மெண்டு தேவையாயுமிருக்கும் கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு பரம்பரை பாத்தியம் எதற்காக ஏற்பட்டிருகிறது' அதன்காரணம் என்ன என்பதை கவனிக்காமலே விட்டுவிடுகிறார்கள் மற்றசர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சேவகன்முதல் பென்ஷன்கொடுக்கப் படுகிறதே. அந்த பென்ஷன் கிராம உத்தியோகஸ்தர்களுக்குண்டா? மற்ற டிபார்ட்மெண்டுகளைப்போல் பிராவிடெண்டு பண்டாவது உண்டா? தனது ஆயுள்காலமுழுவதும் சர்க்காருக்கு உழைத்துவிட்டு தள்ளாதகாலத்தில் வீட்டில் சுகமாயிருக்க சர்க்காரால் என்ன பிரயோஜனம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கிடைக்கிறது தன்னுடைய வார்சுக்கு வேலைகிடைத்தால் அதைக்கொண்டாவது கிராமத்தைவிட்டுப் போகாமல் தள்ளாத காலத்தை கஷ்டமில்லாமல் கழிக்கக் கூடியதாயிருக்கிறது. அதையும் கெடுத்துவிடுவது பிரயோஜனப்படுமா? இப்பொழுது வார்சுகளுக்கு வேலைகொடுப்பதாகயிருந்தாலும் அதற்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. எந்த சமயத்தில் வேலை காலியாகிறதோ அப்போது வார்சானவன் 18 வயது நிறைந்தவனாயும் வேலைக்கு வேண்டிய சர்வே ஸ்பெஷல் டெஸ்டுமுதலிய பரீக்ஷைகள் தேறினவனாயுமிருக்கவேண்டுமாம், அப்படியில்லாத

வரையில் வார்சுபாத்தியம் நிராகரிக்கப்பட்டுவிடுகிறது. இதனால் வேலையிழந்த குடும்பங்கள் பல. மற்ற ஜில்லாவிலுள்ளவர்கள் அனுபவித்துவரும் சுதந்திரத்தை தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, சேலம், நீலகிரி, தென்கன்னடம், தென்னார்காடு ஜில்லாக்களிலுள்ளவர்கள் ஏன் அனுபவிக்கக்கூடாது. அதனால் கெவர்ன்மெண்டாருக்கு ஏற்படும் நஷ்டமென்ன. சுதந்திரமுள்ள ஜில்லாக்களில் வேலை என்ன நடைபெறுமலிருக்கிறது பக்ஷபாதமாயுள்ள இந்த விஷயம் ஒரேமாதிரியாக செய்யப்படவேண்டியது மெத்த அவசியமும் நியாயமுமாகும். இந்த விஷயத்தில் சம்மந்தப்பட்ட 6ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களும் தூங்கிக்கொண்டிருப்பது அழகல்ல. நல்ல சமயத்தை கைவிட்டவர்கள் அழுவார்கள். எதற்கும் முயற்சியிருந்தாலொழிய காரியம் கைகூடுவது சிரமமாகும். இந்த 6ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களும், அந்தந்த ஜில்லாவில், ஜில்லா கான்பரன்ஸ்களை ஜனவரி மாதத்தில் நடத்தி சரியான தீர்மானங்களைச்செய்து கெவர்ன்மெண்டாருக்கு அனுப்புவதுடன், பிப்ரவரி மாதத்தில் இந்த மசோதா சட்டசபையில் விவாதத்துக்கு வரப்போகிறபடியால் அந்தசமயத்தில் பட்டணம்போயிருந்து சட்டசபை மெம்பர்கள் எல்லோரையும் பார்த்து மசோதாவுக்கு பூர்ண ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டியது அவசியமானபடியால் அதற்கு சரியான பிரதிநிதிகளாய் சிலரை தேர்ந்தெடுத்து டெபுடேஷனை அனுப்பி வேண்டிய காரியங்களைச்செய்யும்படி அதிகாரம் கொடுத்து அனுப்ப வேண்டியதும் அவசியமாகும்.

ஜில்லா கான்பரன்ஸ்கள் 10பேர்கள் கூடி நடத்தினதாக பேர்பண்ணிவிடுவது பிரயோஜனமாகாது. உணர்ச்சியுள்ள கான்பரன்ஸ் என்றும் பேருக்கு நடந்ததென்றும் கெவர்ன்மெண்டார் அறிய சக்தியுள்ளவர்களென்பதை மறக்கலாகாது. கான்பரன்ஸுக்கு ஜில்லாவிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களில் முக்கால்வாசிப்பேராவது வந்து உணர்ச்சியுடன் விவாதித்து தீர்மானங்களைச்செய்து அனுப்புவீர்களானால் அதன் தன்மையை கெவர்ன்மெண்டார் மதிக்காமலிருக்கமுடியாது. தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் கான்பரன்ஸை ஜனவரி மாதத்தில் கும்பகோணத்தில் நடத்தலாமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். கும்பகோணம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் அதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்யுமானால் மற்ற சங்கங்களும் நிச்சயமாக ஒத்துழைக்குமென்றே நாம் நம்புகிறோம். வருஷாவருஷம் ஜமாபந்திக்காக தாலுக்கா ஒன்றுக்கு பதினாயிரம் ரூபாய்வரையில் செலவழிக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் தங்கள் நன்மைக்காக நடத்தப்படும் ஒரு கான்பரன்சுக்கு செலவழிக்கக்கூடிய பணத்துக்கு பின் வாங்குவார்களென்று நாம் நினைக்கவில்லை. தஞ்சை ஜில்லாதான். அதிலும் கும்பகோணம். பாபநாசம் தாலுக்காக்கள்தான் முன்னணியில் நின்று உழைத்து பலனையும் அடைந்து கஷ்டத்திற்கும் உள்ளாயிற்று என்பதை மறக்க வேண்டாம். இரண்டொருவர் குடும்பங்கள் கஷ்டப்பட்டாலும் முப்பதினாயிரம் குடும்பங்கள் சுகத்தையடையவில்லையா! எந்த காரியந்தான் உலகத்தில் சிலர் கஷ்டப்படாமல் நன்மையாக முடிந்திருக்கிறது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" "ஒன்றுபட்டா லுண்டுவாழ்வு" என்ற மூதுரைகளை நம்புங்கள் உடனே கான்பரன்சுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள். மற்றக் குறைகளையும் நிவர்த்தித்துக்கொள்ள வழி தேடுங்கள். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். இந்த நல்ல சமயத்தை கைநழுவ விடாதீர்கள். உடனே கான்பரன்சுக்கு வேண்டிய ஏற்பாடுகளை தீவிரமாகச்செய்துசிறப்பாக நடத்தி நன்மையை அடைவீர்களாக.

மாகாணச்சங்க பிரசிடெண்டு ஸ்ரீமான் P. சுப்பையாபிள்ளையும், செக்ரிடரி ஸ்ரீமான் V. ராமானுஜ தாத்தாச்சாரியாரும், இவ்விஷயத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதுடன் பிப்ரவரி மாதம் சட்டசபை கூடும் சமயத்தில் சென்னையில் மாகாண கான்பரன்ஸ் கூடும்படியான ஏற்பாட்டையும் செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

---



### காங்கிரஸ்

காங்கிரஸ் மகாசபை இவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் சென்னையில் கூடிற்று. ஏற்கனவே 1914வரு சென்னையில் காங்கிரஸ் நடந்தது. பதிமூன்று வருஷம் கழித்து இப்போது கூடுகிற மகாசபையை மிகவிமரிசையாக நடத்திவைப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எதற்கும் முக்கியம் பணமே. தமிழ் ஜில்லா வாசிகள் தயங்காது கொடுத்து ஆதரிக்கவேண்டியது அவர்கள் கடமையாகுமென்றும் மற்றவிடங்களில் நடந்தவற்றிற்கு குறைவுபடாமலாவது நடத்திவைக்கவேண்டுமென்றும், எண்ணி உபசரணைக்கமிட்டி மெம்பர்களாகச் சேர்ந்தும் நன்கொடைகள் தாராளமாக அளித்தும் பணத்தட்டில்லாமல் செய்ததுடன் காங்கிரஸுக்கு ஏராளமான பிரதிநிதிகளை அனுப்பியும், விஸிட்டர்களாய் அநேகம்பேர்கள் விஜயம்செய்தும் இவ்வருஷ காங்கிரஸ் மகாசபையை வெகுசிறப்பாய் நடத்திவைத்தனர்.

அதே சமயத்தில் காங்கிரஸ் பொருட்காக்ஷியும் அநேக கான்பரன்சுகளும் காங்கிரஸ் காம்பவுண்டிலேயே நடைபெற்றன.

---

## ரீசெட்டில் மெண்டு
### டைக்கிளாட் ரிஜிஸ்டர்.

ரீசெட்டில்மெண்டு டைக்கிளாட் ரெஜிஸ்டர்கள் அச்சாகி விற்பனைக்கு வந்துவிட்டன. சென்ற செட்டில்மெண்டு டைக்கிளாட் ரெஜிஸ்டரின் விலை 4-அணா 6-அணாவாகயிருந்தது இந்த ரீசெட்டில்மெண்டு புஸ்தகத்தின் விலை 3 ரூபா முதல் 8 ரூபாய் வரையில் ஆகிறது. சராசரி கிராமம் ஒன்றுக்கு 5-ரூபாயாக ஆகிறது. இந்த விலை மிகக் கடுமையானதென்றே அபிப்பிராயப்படுகிறோம் இவைகள் கெவர்ன்மெண்டு பிரஸிலேயே அச்சாகியிருக்கிறது. கெவர்ன்மெண்டாருக்கோ இந்த புஸ்தகம் தங்கள் உபயோகத்திற்காக அச்சடிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது அதற்காகவே அச்சடித்திருக்கிறார்கள். அத்துடன் இன்னும் சில பிரதிகள் கூட அச்சடித்திருக்கிறார்கள். அப்படி அடித்த பிரதிகளை அதிகவிலைக்கு விற்க யாதொரு நியாயமுமில்லை மிராசுதார்கள் வரிப்பணத்திலிருந்து தான் முந்திய புஸ்தகங்களும் அடிக்கப்பட்டிருக்கிறதென்பதை மறுக்க முடியாது. செட்டில்மெண்டிலும், ஏராளமாய் வரியை உயர்த்திவிட்டு இந்த புஸ்தகத்திற்கும் ஏற்கனவே சராசரி 6-அணா விலையாகயிருந்ததை 5 ரூபாயாக உயர்த்திவிட்டது மிராசுதார்களுக்கு நியாயம் வழங்குவதாகமாட்டாது. கெவர்ன்மெண்டார் வியாபாரிகளல்ல மிராசுதார்களுக்கு வேண்டிய சவுகரியங்களை செய்துகொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உடனே கவனித்து ஷை ரீசெட்டில்மெண்டு டைக்கிளாட் ரெஜிஸ்டர்களின் விலையை குறைக்கும்படி உத்திரவு செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

### ஆயுர்வேத ஆஸ்பத்திரியும் கும்பகோணம் தாலூகா போர்டாரும்.

கும்பகோணம் தாலூகாபோர்டாரின் ஆதீனத்திற்குள்பட்டு ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஒன்று கூட ஏற்படவில்லை. கும்பகோணமிருந்து வலங்கிமான் வரையில் 6 மைல் தூரத்துக்கு மத்தியில் யாதொரு வைத்திய வசதியும் இல்லாமலிருப்பது கிராமவாசிகள் மிகவும் சாதாரண வியாதிகளுக்கு சிகித்சை செய்துகொள்வதற்குக்கூட திண்டாட வேண்டியதாயிருக்கிறது. தகுந்த நாட்டு வைத்தியர்கள்கூட இப்பக்கத்தில் கிடைப்பது அருமையாயிருக்கிறது ஆகையால் போர்டார் அவர்கள் கும்பகோணத்திற்கும் வலங்கிமானுக்கும் மத்தியில் ஒரு ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஏற்படுத்திக்கொடுக்க வேணுமாய்கோருகிறோம். அந்தந்த ரேஞ்சு சம்மந்தப்பட்ட மெம்பர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு பந்தநல்லூர், பட்டீஸ்வரம். கோட்டூர், திருமங்கலக்குடி, அம்மங்குடி, முதலிய இடங்களிலும் ஏற்படுத்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கோருகிறோம்

### கல்வி வரி.

பாபநாசம் தாலுகா போர்டார் நிலவரியின் பேரில் ரூபாய்க்கு ஒரு பைசா வீதம் கல்வி வரி விதிக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். இதன்மூலம் சுமார் ரூபாய் 6000 கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது ஸர்க்காரில் இதே தொகை கொடுப்பார்கள் ஆகவே 12000 ரூபாய் கல்வி அபிவிருத்திக்காக மட்டில் செலவழிக்க இடமேற்படும். இது ஆரம்பக் கலவி அபிவிருத்திக்கு நன்மையேயாகும். பள்ளிக்கூடமில்லாத கிராமங்களில் இந்த தொகையைக்கொண்டு பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டும். மேற்படி போர்டாரின் வருமானம் குறைவாயிருப்பதைக்கொண்டு இந்தவரி விதிக்கப்பட்டதுபோலும். கெவர்ண்மெண்டார் கல்வி வரியினால் வசூலாகும் தொகைக்குச் சமமாக தாங்களும் கிராண்டு கொடுப்பது என்று ஏற்படுத்தியிருப்பது நியாயமாகாது. அதுவே வரி விதிக்கும்படி ஒரு தூண்டுகோல் செய்கிறது. செலவுக்குத்தக்கபடி பொது வருமானத்திலிருந்து ஆரம்பக் கல்விக்கு தாராளமாய் கிராண்டுகள் கொடுக்கப்படவேண்டியதே நியாயமாகும். நிலவரிப்பளு தாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் நிலச்சுவான்தார்களையே இந்த வரியும் பாதிக்கும்.

### மருதாந்தநல்லூர் தேவஸ்தானம்.

திருக்கற்குடி என வழங்கும் இந்த க்ஷேத்திரம் ஸ்ரீ திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. இந்த தேவஸ்தானத்திற்கு டிரஸ்டியாக இருக்கும் நமது ஆதரணை கர்த்தர் ஸ்ரீமான் என் வெங்கட்டராமய்யர் அவர்கள் தம் கையிலிருந்து 2000 ரூபாய் செலவுசெய்து திருப்பணி நடத்திவருகிறார். குன்னியூர் ஸ்ரீமான் K S. சிவசுப்பிரமணிய அய்யர், M L.C, அவர்கள், ஸ்ரீமான் D நாராயணசாமி அய்யரவர்கள் திருக்கருகாவூர் ஸ்ரீமான் V. கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்கள், அலவந்திபுரம் ஸ்ரீமான் A லெட்சுமண அய்யரவர்கள் இவர்கள் தாராளமாய் திருப்பணி தர்மத்திற்கு பொருளுதவிசெய்வதாய் வாக்களித்திருக்கிறார்கள். திருப்பணிவேலைகள் முடிந்து சித்திரைமீக்குள் கும்பாபிஷேகம் நடந்துவிடுமென்று தோன்றுகிறது. இந்த தேவஸ்தானத்திற்கு சொந்த ஐவேஜி கிடையாது. மருதாந்தநல்லூர் குடும்பத்தாராலேயே வெகுகாலமாக சொந்த தர்மசொத்திலிருந்து செலவழித்து நடத்திவருகிறார்கள். தர்ம விஷயத்தில் பூர்ண சிரத்தையுடன் பாடுபடும் நமது ஆதரணை கர்த்தர் அவர்களுக்கு தீர்க்காயுளையும், பூர்ண ஐஸ்வரியத்தையும் கொடுத்தருளவேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

### "இந்து நேசன்" வருஷ அனுபந்தம்.

இந்து நேசன் வருஷ அனுபந்தம் வரப்பெற்றோம் நல்ல வழுவழுப்பான ஆர்ட் பேப்பரில் பெரிய சைஸில் 80 பக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது. அதில் அருமையான அநேக வியாஸங்களும், கதைகளும், சரித்திரங்களும் அநேக மேதாவிகளால் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டு வெளியாகியிருக்கின்றன பத்திராதிபர் சென்ற 25வருஷகாலமாய் பத்திரிகைத்தொழிலிலேயே ஈடுபட்டு என்ன கஷ்டம் நேர்ந்தபோதிலும் சளைக்காது விடாமுயற்சியுடன் இந்துநேசன் பத்திரிகையை நடத்திவருகிறார் அன்னாருக்கு இவ்வயது காலத்தில் நேர்ந்த தாங்கமுடியாத மனத்துயரமானது சகிக்கக்கூடியதல்ல, ஈசன் எப்பொழுதும் தன்னடியார்களையும் நல்லோர்களையும் சோதிப்பதே வழக்கமாய்க் கொண்டிருப்பதைக்கொண்டு ஆறுதலடையவேண்டியதே. அன்னாருக்கு அவதரித்திருந்த அருந்தவப் புதல்வனும், அ. முத்துகிருஷ்ணன் என்னும் 20 வயதுள்ள புண்ணியவான் இண்டர்மீடியட் பரீக்ஷை பாஸாகிய சமயத்தில் திருவலஞ்சுழியில் அரசலாற்றில் ஸ்நானம்செய்யச்சென்று ஈசனடி சேர்ந்தார். கலாசாலையில் படிக்கும் காலத்தில் வீண்பொழுது போக்காமல் ஒழிந்த நேரங்களில் அவர் எழுதிவைத்திருந்த "குணசிம்மன்" என்னும் கதையை அவருடைய ஞாபகார்த்தமாய் இந்த அனுபந்தத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. கலாசாலைப்படிப்பு முடிவதற்கு முன்னேயே தமிழில் இவ்வளவு அருமையாய் எழுதக்கூடிய ஓர் வள்ளலை தேசம் இழந்தது துர்ப்பாக்கியமேயாகும். அத்துடன் அவருடைய படமும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது இன்னுமநேக படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன்விலை ரூபாய் ஒன்றுதான் மிகவும் குறைவே. வேண்டுவோர் பத்திராதிபர் இந்துநேசன், 65, அரண்மனைக்காரன்தெரு, சென்னை. என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.



# கிராமப் பஞ்சாயத்துகள்.

## சில முக்கியமான குறிப்புகள்.

நன்னிலம் தாலுகா போர்டு வைஸ்-பிரசிடெண்டு

ஸ்ரீமான் எம். ஆர். சாம்பசிவ ஐயர் வெளியிட்டது.

இந்த கிராமப் பஞ்சாயத்தானது நம் நாட்டிற்குப் புதிதான ஒரு ஏற்பாடல்லவென்பதும், புராதன காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் நடந்துவந்த விதமாக கிராமப் பொதுக்காரியங்கள் முதலியன இக்காலத்திலும் செவ்வனே நடந்துவருமாறு ஏற்படுத்தப் பட்டதாகும். சுமார் 30 வருஷ காலமாய் நம்நாட்டுத் தலைவர்களுடைய முயற்சியால் எற்கனவே ஹிந்து மகமதிய ராஜாங்கத்திலும் இருந்து, ஆங்கில அரசாங்கத்தார்களில் அழிந்துபோன கிராம பஞ்சாயத்துகள் திரும்பவும் உயிர்ப்பிக்கப் படவேண்டுமென்ற ஸாதனையின்பேரில் அரசாங்கத்தாரால் இந்த சட்டமானது இயற்றப்பட்டதென்று கவனிக்கப்படவேண்டியது அவசியம். இவ்விதமாக நம் முன்னோர்கள் நாளில் கிராம பொதுக்காரியங்கள் கிராமத்தில் சிலபெரியோர்களால் எல்லா கிராமவாசிகளுடைய ஸம்மதத்தின் பேரிலும் நடத்தப்பட்டு வந்ததென்பது நம்தாலூகா கிராமத்தில் எதை உதாரணமாக எடுத்துக்கொண்டாலும் நன்குவிளங்கும். ஒவ்வொரு கிராமத்திலும், பொது ஊழியர்கள் தச்சன், கருமான், கோவில்கள், நீராணிக்கம். வெட்டியான், தலையாரி, இடையன் முதலியோருக்கு கிராம பொதுவில் எல்லாருக்கும் சொந்தமான நிலங்களில் மான்யங்கள் ஒதுப்பட்டிருக்கின்றன. சில கிராமங்களில், புரோகிதர், வைத்தியர், மாட்டு வைத்தியர் முதலியோருக்குக்கூட மான்யங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு அவர்களால் அனுபவிக்கப்படுகின்றன இவர்கள் அந்நாளில் ஏழை பணக்காரரென்றும், நிலச்சுவான்தார், கூலிக்கு வேலைசெய்யும் பண்ணை ஆள் என்ற வித்தியாசமன்னியில் அனந்தம் பேர்களுக்கும் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து மான்யங்கள் அனுபவித்து பலனடைவதுந் தவிர ஏருக்கு களத்தில் இத்தனை மரக்கால் நெல்லென்றும், களத்தில் நிலச்சுவான்தாரிடம், அறுப்பு முதல் தினம், கடைசி தினம், பாக்கி நாள்களிலும் வந்து வரும்படி பெற்றுக்கொண்டுபோவது வழக்கமாயிருந்தது. அவ்விதம் கிராம தொழிலாளிகள் அவர்கள் கடமையைச் செலுத்தத்தவறினாலும் கிராமத்தார் தொழிலாளிகளுக்கேற்பட்ட சுதந்தரத்தைக் கொடுக்கத்தவறினாலும் கிராமத்தில் எல்லாராலும் மதிக்கப்பட்டு, கிராமத்தினுடைய ஸம்மதத்தின்பேரில் சிலர் அவரவர்களைக் கண்டித்து கிராம நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தினார்களென்பது கிராமத்தில் அனுபவமுள்ளவர்களுக்கு விளங்கும். சாதாரணமாக ஒவ்வொரு கரைக்கு ஒருவர், கிராமப்பொது காரியத்தில் ஈடுபட்டவர்களாகஇருந்திருக்கின்றார்கள். கடைசியாய் அவ்விதம் இருந்தவர்களுடைய பெயரால் அந்தந்தக் கரைகள் வழங்கிவந்தது.(ஒரு கரை என்பது கிராமத்திற்குத் தகுந்த மாதிரி 2 வேலி முதல் 8-வேலிவரையில் வழக்கத்தில் இருந்து வருகிறது.)

இன்னும் அக்காலங்களில், கிராமத்தில் மொத்தத்தில் மரங்கள் வைத்து பயிர்செய்து மரங்கள் காய்ப்புக்குவந்தபிறகு கரைவீதம் பிரித்துக்கொள்வது காணலாம். தவிர கிராமத்தில் குளங்கள் குட்டைகள் முதலியன பரிபாலித்து குளிப்பதற்கு இன்ன குளம், அருந்துவதற்கு இன்ன குளம், மாடுகள் குளிப்பாட்ட இன்ன குளம் என்று ஒரு வரை ஏற்படுத்தி அந்தந்த விகிதம் நடக்கும்படி காவலுடன் அமுல் நடத்தியிருக்கிறார்கள். குளங்களின் பாசியை இன்னார் எடுத்துக்கொள்வதென்றும், சாதாரணமாக கிராமத்திலுள்ள குடிகள் பாசியை

உபயோகப்படுத்திக்கொண்டு, என்னென்ன காரியங்கள் செய்வதென்றும், ஏற்படுத்தி அந்தவிதமே நடவடிக்கை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

கிராம பொதுவிடங்களிலுள்ள வரும்படிகள் போதாத காரியங்களுக்கு கரைக்கு இவ்வளவென்று வரி வைத்து அந்த காரியங்களைச்செய்துகொண்டும் வந்திருக்கிறார்கள். உதாரணமாக குளம் வெட்டுதல், கோவில் திருப்பணிசெய்தல், பெரியோர்கள் வந்தால் ஸன்மானம் செய்தல் முதலியன.

கிராமங்களில் நிலங்கள் கைமாறுவதைக்கொண்டும், பல மிராசுதார்கள் கிராமங்களில் வசிப்பதை விட்டுவிட்டதைக்கொண்டும், கிராமத்திலுள்ள பெரியோர்களால் செலுத்தப்பட்ட அமுல்கள் பல ஸர்க்காரால் நியமிக்கப்பட்ட, ஸர்க்காருக்கு ஜவாப்தாரியான கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்பட்டதாலும் கிராமங்களிலுள்ள குளங்கள் முதலிய பொதுஸாதனங்கள் ஸர்க்காருக்கே சொந்தமென்று ஏற்பட்ட காரணத்தைக்கொண்டும், புதிய நாகரீகத்தால் ஏற்பட்டதும், விவரிக்க முடியாததுமான இன்னும் பல காரணங்களைக்கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட புராதன ஸம்பிரதாயங்கள் மாறி, பொதுக்காரியங்கள் கவனிக்கப்படாமல் நின்றுவிட்டன. உதாரணமாக 100க்கு 90 கிராமங்களில் மேற்சொன்ன மானியங்கள் பிரதிவருஷமும் அவைகளுக்குச் செய்யவேண்டிய மராமத்துகள் இல்லாது சாகுபடிக்கே லாயக்கில்லாமல்கூட தரிசாய் இருக்கின்றன. இதர வரும்படிகள் குறைவுற்று அதை வாங்கிக் கொடுக்கும் அதிகாரி இல்லாமல் தொழிலாளிகளும், கிராம பொது ஊழியத்தைவிட்டு, அத்தக்கூலிக்கு வேலைசெய்கிறார்கள் இப்படி வேலைசெய்வதில் தொழிலாளிக்கும் ஸ்திரந்தரமான வரும்படி இல்லாமலும், கிராமத்தார்க்கும் அதிக கூலி கொடுக்கும்படிக்கும், இந்த காரியத்திற்காக ஏற்பட்ட நிலங்கள் வரும்படி கொடுக்காதவைகளாகவும் ஏற்படுகிறது. இன்னும் சில காரியங்களில், ஊரில் வசிக்காத மிராசுதார்கள் பலர், பொதுவடைகளைப் பிரித்தும், பிரிக்காமலும் சொந்த உபயோகத்திற்குக் கொண்டுவந்துவிடுகிறார்கள். கிராமப்பொது தனங்களை காக்கவும், கிராம பொது ஊழியங்கள் செவ்வனே நடக்குமாறு மேம்பார்க்கவுமாவது கிராமத்தில் தன்னுடைய அமுலை செலுத்தக்கூடிய ஒரு நாட்டாண்மைக் கழகம் அவசியமென்பது நன்கு விளங்கும்.

ஒரு கிராமத்திலுள்ள அனைவரும், சுகமாய் வசிக்கவும், அவரவர்களுக்கேற்பட்ட நிலங்களைச் செவ்வனே சாகுபடிசெய்யவும் பின்வரும் விஷயங்கள் அவசியம் கவனிக்கப்படவேண்டியவை :—

1 கிராமத்தில் ஸ்நானபானத்திற்கு சுத்தமான ஜலம்.
2 மாடுகள், கால்நடைகளுக்கு வேண்டிய குளம்.
3 கிராமத்திலுள்ள கோவில்கள், மடங்கள் முதலிய பரிபாலனங்கள்.
4 கிராமத்தில் இருட்டுக்காலங்களில் வெளிச்சம் தெருக்கள் சுத்தமாய்க் கூட்டுதல்.
5 போக்குவரத்து ஸாதனங்களுக்கு ரஸ்தா.
6 கிராம பாய் வாய்க்கால், வடிவாய்க்கால்கள் வெட்டி சீர்திருத்தல்.
7 கிராமப்பொதுவில் முறைப்படி தண்ணீர் பாய்ச்சவும் வடிகட்டவும் நீராணிக்கங்கள்.
8 கிராமங்களில் ஆடு மாடு அழிக்காமலும், திருடாமலும் பாதுகாக்க தலையாரிகள்.
9 இன்னும் மற்ற பொது ஊழியங்கள்.
10 கிராமந்தோறும் ஒரு எலிமெண்டரி பாடசாலை
11 கிராமத்திற்கு எல்லோரும் வந்து கூடி வாசிக்கும்படியாய் ஓர் வாசகசாலையும், ஓர் பொது இடமும்.
12 கிராம பொதுவடைகளை பரிபாலித்து, அவைகளிலிருந்து கிடைக்கும் வரும்படிகளை விருத்தி செய்தல்

மேற்கண்ட விஷயங்களைக் கவனிக்க, கிராம பஞ்சாயத்திற்கு இந்த சட்டத்தினால் ஒருவாறு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துவதும், அதை இன்னும் பலப்படுத்திக் கொள்வதும் நமது கடமையாகும். அவ்விஷயங்களில் ஒவ்வொன்றும் வரிசையாய் எடுத்துக்கொண்டு பஞ்சாயத்து அனுஷ்டிக்கவேண்டிய முறைகளும், இன்னும் அதிகாரத்தைப் பலப்படுத்



க்கொள்ள செய்யவேண்டிய ஸாதனங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

## ஸ்நான பர்னத்திற்கும் ஆடு மாடுகளுக்கும் ஜலவசதி.

நமது தாலூகாவில், புராதனமாய் எல்லோரும் குளங்களிலும் நதிகளிலும் ஸ்நானம் செய்வதும், பானத்திற்கும் அந்த ஜலத்தையே உபயோகப்படுத்துவதென்பதும் ஸம்பிரதாயம். ஒவ்வொரு கிராமத்திலும் ஆடுமாடுகள் குளிப்பிக்க தனிக்குளங்கள் அந்நாளில் ஏற்படுத்தியிருப்பது காணலாம். குளத்துநீரை சுத்தமான இடத்தில் ஏற்பாடுசெய்து அசுத்தங்கள் சேராமல் பந்தோபஸ்து செய்து அந்த ஜலத்தை எல்லோரும் அருந்தும்படிசெய்வது ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் நோக்கமாயிருக்கவேண்டும். அவ்விதம் கிணறுகள் கட்டப்பட்டு ஜனங்களும் அந்த நீர் அருந்துவதுதான் ஆரோக்கியமென்று உணருகிற வரையில் அவர்கள் உபயோகப்படுத்தும் குளத்து ஜலத்தை கூடியவரையில் சுத்தமாயிருக்கும்படி காவல்புரிவது பஞ்சாயத்துகளின் கடமை. ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்கள் கிராமத்தில் பானத்திற்கென்று ஒரு குளமும், ஸ்நானத்திற்கென்று ஒரு குளமும் ஆடுமாடுகளுக்கும் துணி முதலியன துவைக்கவும் ஒருகுளமும், ஆக 3 குளங்கள் இருக்கும்படிக்கும், அந்தந்த குளம் அந்தந்த காரியத்திற்கே உபயோகப்படும்படிக்கும் செய்யவேண்டுவது அவசியம். 3 குளங்கள் ஸாத்தியமில்லாத கிராமங்களில் ஸ்நான பானத்திற்கு மட்டுமாவது ஒன்றும், கால்நடைகளுக்கு ஒன்றும் 2 குளங்கள் பரிபாலிக்கவேண்டியது மிக்க அவசியமான காரியம். மேற்படி குளங்களை பரிபாலிப்பதற்கு ஆக்ட் 23வது செக்ஷன் 16வது உட்பிரிவுப்படி பஞ்சாயத்திற்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 15வது செக்ஷன் 7வது பிரிவுப்படி குளங்கள், கிணறுகள் வெட்டவோ மராமத்து செய்யவோ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்களை பஞ்சாயத்துகள் அமுலுக்குக்கொண்டுவந்து குளங்கள் மேடிட்டிருக்கும் பக்ஷத்தில் அவைகளை வெட்டவும், இன்ன குளங்களில் இன்னின்ன காரியங்களுக்குத்தான் உபயோகப்படுத்தவேண்டுமென்று திட்டப்படுத்தி அந்தப்படி நடப்பதற்குவேண்டிய காவல்களும் நியமிப்பது பஞ்சாயத்துகளின் கடமையாகும். தவிர ஒவ்வொரு தெருவிலும் தெருவிற்குத்தக்கவாறு ஒன்று அல்லது இரண்டு கிணறுகள் ஏற்படுத்தி, அந்தக் கிணறுகளை பானத்திற்குவேண்டிய ஜலத்திற்கு உபயோகப்படும்படி செய்யவேண்டியதும் பஞ்சாயத்தின் கடமையாகும்.

மேடிட்ட குளங்களை சீர்திருத்தவும் புதிதாய் கிணறுகளை அமைக்கவும், பஞ்சாயத்துகள் கூடியவரையில் கிராமத்திலுள்ள தனவான்களிடம் நன்கொடையாகப்பெற்று, போதாதபக்ஷத்தில் வரி ஏற்படுத்தவேண்டும். கிராமத்திற்கு இவ்வேலைகளுக்கு எவ்வளவு தொகை தேவையோ அவ்வளவில் ஒரு பாகத்தை வசூல்செய்துகொண்டு ஸர்க்காரில் ஒரு பாதி கொடுத்துதவ வேண்டுமென்று ஸர்க்கார் கிராண்டுகள் ஸாங்ஷன் ஆகக்கூடிய காலங்களில் தவறாது கேட்டு அந்த கிராண்டுகளைப் பெறவேண்டும். தாலூகா போர்டிலும் இவ்வித பெரிய காரியங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று கோரி இவ்விதம் கிடைக்கும் தொகைகளையும் சேர்த்துக்கொண்டு வேலைகளை செய்து முடிக்கவேண்டும். இவ்வித காரியங்கள் 6 மாதம் கழித்து வேலைசெய்யக்கூடியதாயிருந்தால் இப்பொழுதே அதற்குவேண்டிய திட்டங்கள் தயாரித்துக்கொண்டு, பஞ்சாயத்துகொடுக்கும் பணத்துடன் ஸர்க்கார் கிராண்டையும், தாலூகாபோர்டு கொடுக்கக்கூடிய உதவியையும் எதிர்பார்க்கவேண்டும். பஞ்சாயத்துகள் அவ்விதம் தயாராக இருந்தால், ஸர்க்காராவது, தாலூகா போர்டாவது உதவி மறுக்கமுடியாதென்பது திண்ணம். இவ்வேலைகளுக்கு வரி போடுவதில் பஞ்சாயத்தில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், நிலச்சுவான்தாரிடம் வேலி 1க்கு இவ்வளவு என்பதுடன் நிலச்சுவான்தாரல்லாத கூலிவேலை செய்பவர்களுக்கு தலா இவ்வளவு ஆள் என்று வரிவிதிக்கலாம். உதாரணமாக பின்வருமாறு தீர்மானம் அமைக்கலாம்.

(எ) இன்ன குளம் வெட்டுவதற்காக செல்லக்கூடிய ரூபாய் 1000க்கு ஸர்க்கார் கிராண்டு கிடைக்கக்கூடியரூபா 500போக பாக்கி பஞ்சாயத்துநிதியில்

யிலிருந்து செலவழிக்க இந்த கிராமத்திலுள்ள மிராசுதார்களிடமிருந்து வேலி 1க்கு ரூபா 5வீதம் வரி வசூலிப்பதென்று இந்த பஞ்சாயத்து தீர்மானிக்கிறது.

குறிப்பு:—வேலி 1க்கு இவ்வளவு ஆள் இன்னயிடத்தில் வேலைசெய்யவேண்டும் என்று பஞ்சாயத்தால் குறிப்பிடப்படும் திட்டப்படி வேலை செய்து கொடுக்கும் மிராசுதார்களிடமிருந்து இந்த வரி வசூலிக்கப்படமாட்டாது.

(பி) நிலச்சுவாந்தார் இல்லாத கூலி வேலை செய்பவர்களிடம் ஒரு ஆள் 1க்கு 1 ரூபாய் வீதம் வரி வசூலிப்பதென்று இந்த பஞ்சாயத்து தீர்மானிக்கிறது.

குறிப்பு:—இந்த வரியானது பஞ்சாயத்து குறிப்பிடும் காலத்தில் 2 ஆள் வேலை செய்பவர்களிடம் வசூலிக்கப்படமாட்டாது.

இவ்விதம் வசூலாகும் பணத்தைக்கொண்டும், ஆள் வேலைசெய்யும் கூலி மதிப்பைக்கொண்டும் ஒரு பாதி சேகரம் செய்வது சுலபமாயும் கிராமத்தில் ஆட்சேபணையில்லாமலும் இருக்கக்கூடியது.

### கிராமக் கோவில்கள், மடங்கள், சாவடிகள் முதலியவை பரிபாலனம்.

நம் முன்னோர் காலங்களில் கிராமக்கோவில்கள் முதலியன கிராம பஞ்சாயத்தார்களாலேயே பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கின்றன. எந்த கிராமத்திலும் பூசாரிமான்யம் என்றும், பெருமாள்கோவில் மான்யம் என்றும், பிள்ளையார்கோவில் மான்யம் என்றும் ஒவ்வொரு கோவிலுக்கும் கிராம பிரிவினை காலத்தில் கிராமப் பொதுவில் நிலங்கள் ஒதுக்கப்பட்டு அந்த நிலங்களின் வருமானங்களைக் கொண்டு தேவாலயங்கள் பரிபாலிக்கப்பட்டுவருகின்றன. சில்லரை கோவில் பூஜை செய்யும் பூசாரி கிராம ஊழியனாகவே கருதப்படுகிறான். புராதன பஞ்சாயத்து நாட்டாண்மை குலைபவே மேற்படி சமுதாய நிலங்களை கிராமத்தில் செல்வாக்குள்ள சிலர் அந்த சமுதாயங்களை அனுபவித்துக்கொண்டு அந்த தர்ம காரியங்களை சரிவர நடத்தாமல் இருப்பதோடு மேற்படி கோவில்களும் அடைபட்டு இருப்பதை நாம் இப்பொழுது வெகு கிராமங்களில் பார்க்கலாம். ஆதிகாலங்களில் எந்த காரியங்களுக்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டனவோ அந்த காரியங்கள் சரிவர நடக்கும்படி செய்யவேண்டியதானது கிராமப் பொதுக்காரியங்களை கவனிக்கும்படி ஏற்படுத்தப்படும் பொதுச் சபையின் முக்கிய கடமையாகும். தவிர ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள குளங்களின் பாசிகளைக் குடிகளிடம் கிரயம் செய்து அத்தொகைகளைக்கொண்டு கிராம தேவதைகளின் உத்சவங்களை சிறப்பாய்செய்வது நமதுவழக்கம். தாலூகாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கட்சி பேதத்தினால் பாசிகள் சரிவரவிற்கிரயமாகாமலும் உத்ஸவாதிகள் நடைபெறாமலிருப்பதும் பிரத்தியட்சம். கிராமகாரியங்களை கவனிக்கும் பஞ்சாயத்துகள் இவ்விஷயங்களை நன்கு கவனித்து இவைகளை பஞ்சாயத்து ஆதீனத்திற்குக் கொண்டு வந்து பஞ்சாயத்து மேன்பார்வையில் தொன்றுதொட்டு கிராமத்தில் நடந்துவந்த முறைப்படி வழக்கங்களைக் கையாடுவது முக்கியமான கடமையாகும். கிராமத்தார்களும் இவ்விதமான பரிபாலனத்தைப் பஞ்சாயத்தார்கள் ஆதீனத்தில் விடுவது மேற்படி காரியங்கள் செவ்வனே நடந்துவருவதற்குச் செய்ய வேண்டிய காரியமாகும். இவ்விதமான சமுதாய சொத்துக்கள் ஒருக்கால் பஞ்சாயத்து எடுபட்டுப் போனால் ஸர்க்காருக்கே சொந்தமாய்விடுமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை ரிஜிஸ்திரார் ஜெனரல் அவர்களுடைய பின்கண்ட உத்தரவில் பஞ்சாயத்துகள் எடுபட்டுப்போனால் இப்பேர்ப்பட்ட சமுதாயங்கள் கிராமத்திற்குத்தான் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோல் கிராமத்திற்குச்சொந்தமான மடங்களும் சாவடிகளும் யதிகள், பரதேசிகள் வந்து தங்குவதற்கு ஒரு இடமாயும் காலை மாலை கிராமத்தார் கூடுவதற்கு பொருத்தமான ஒரு இடமாயும் அமைந்திருக்கின்றன இவைகள் இக்காலங்களில் வெகு ஜீரணமாய் கட்டிடங்கள் அழிந்து தங்குவதற்கு லாயக்கில்லாமல் சீர்கேடான நிலைமை அடைந்திருப்பதை நாம் தினம் காண்கின்றோம் இந்த கிராம பொது சொத்துக்களைப் பரிபாலிக்கவேண்டியதும் கிராம ஸபையின் முக்கியமான கடமையில் ஒன்றாகும். (தொடரும்)



# இந்திய ஆட்சிமுறை.

## பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னும் பின்னும்

# இந்தியாவின் புராதனச் சிறப்பு.

### கிராம ஸ்தாபனங்களின் மேன்மை

ஓர் இந்திய மாணவர் ஆக்ஸ்போர்டில் படித்த வியாஸம்.

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

18-ம் நூற்றாண்டு இறுதியில் கிழக்கிந்தியக் கம்பெனி கவர்னரொருவர், ஸிவில் விஷயங்களை விசாரணை செய்து முடிவு செய்யும் பொருட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஓர் இராஜ உத்தியோகஸ்தருக்கு ஓர் அரிய கட்டளை பிறப்பித்தார். அக்கட்டளையில் “எனது விருப்பப்படியும் கட்டளைப்படியுமே நீதி நிர்வாகம் செய்துவர வேண்டுமேயல்லாது ஆங்கிலச் சட்டங்களைப் பின்பற்றியொழுகக்கூடாது. அவைகளெல்லாம் ஆபாசக்களஞ்சியங்கள். அவைகள், தங்களது குடும்பங்களைச் சரியாக நிர்வகிக்கத்தெரியாத நாட்டுப்புறத்தவர்களால் நிர்ணயிக்கப்பட்டவைகளாகும். அவ்வப்போது நான் பிறப்புவிக்கும் உத்திரவுகள் சட்டங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றின் பிரகாரமே யாவும் நடைபெறுமென்று எதிர்பார்க்கிறேன்.” (மால்கோம் 30-31) 19-ம் நூற்றாண்டில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. நீதி நிர்வாக முறையும் இங்கிலாந்தில் நடைபெறுவது போல் மாற்றப்பட்டது. நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்கள் சில விருக்கின்றன. அவற்றைக்குறிப்பிடாமல் மேற்செல்ல எம்மனம் ஒப்பவில்லை. நிற்க, ஸிவில் வழக்குகளில் ஹைகோர்ட்டுகளில் ஜூரிகள் ஏற்படுத்தப்படும் வழக்கம் கிடையாது. கலெக்டராகவும் மாஜிஸ்டிரேட்டாகவு மிருப்பவரே வரி வசூலிக்கும் வேலையையும் நடத்திவருகிறார். நிர்வாகங்களையும் அவரே செய்துவருகிறார். பிரதான மாஜிஸ்திரேட்டும் அவர்தான். இவ்விதமிருப்பதால் நீதி நிர்வாகத்தில் அவருக்குள்ள அதிகாரத்திற்கு ஓரெல்லை. இவை ஆச்சரியமாகத் தோன்றுகிறதல்லவா? ஹைகோர்ட்டுகளில் உபயோகப்படுத்தப்படும் பாஷை ஆங்கிலம். கீழ்க்கோர்ட்டுகளிலும் இப்பாஷையே இப்பொழுது பரவி வருகிறது. கீழ் கோர்ட்டுகளில் வழக்குகளுக்குச் செல்வோர்களில் 100-ல் ஒருவருக்குக்கூட இப்பாஷை நன்றாகத் தெரியுமென்று சொல்லுவதற்கில்லை. முற்காலங்களில் நீதி பெறுவதற்கு எவ்வித பணச்செலவும் தேவையில்லை. அரசரைக்கூட யாரும் நேரில்கண்டு பணச்செலவின்றி நீதி பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்பொழுதோ நீதி பெறுவதற்கு ஏராளமாகப் பொருட்செலவு செய்யவேண்டியிருக்கிறது. அப்படிச்செலவுசெய்தாலும் சரியான நீதி கிடைக்குமென்று நம்புவதற்கில்லை. ஸ்டாம்பு டியூடியும் அளவுகடந்து உயர்ந்துவிட்டதால் பலர் நீதி ஸ்தலங்களுக்குச் செல்ல முடியாமலிருக்கின்றது. வழக்குகளுக்குச் செல்வோர்கள், “அதிக பொருட்செலவு ஏற்படுவது நிச்சயமாயும், செலவு செய்தாலும் நியாயங்கிடைக்குமென்ற விஷயம் நிச்சயமில்லாமலுமிருப்பதால் நியாயமான வழக்குகளிலுங்கூட நீதி ஸ்தலம் செல்ல விருப்பமில்லாமலிருக்கிறது” எனக் கூறுகின்றனர். (மூர்ஷிடாபாட் அப்பீல் கோர்ட்டு 1802-ம் வருஷத்து 5-வது அறிக்கை 671-ம் பக்கத்தில் இவ்விவரம் காணப்படுகின்றது)

## நிர்வாக அதிகாரம்.

நீதி நிர்வாக அதிகாரிகள் பல இலாகாக்களுக்குத் தலைவர்களாயிருப்பதாலும், சிறு வழக்குகள் உடனுக்குடன் தீர்க்கப்படாததாலும், முற்காலங்களில் கிராமாதிகாரிகளுக்கிருந்து வந்த அதிகாரம் பெரும்பாலும் இப்பொழுது குறைக்கப்பட்டிருப்பதாலும், நீதிபெறுவது வெகு துர்லபமாக முடிந்துவிட்டதென்று சொல்லாமலிருக்க முடியவில்லை.

குற்றவாளிகளெனப்படுவோர் தங்களது நலவுரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள பிரிட்டிஷ் நீதிஸ்தலங்கள் தகுந்த வசதியளிக்கின்றன வென்று புகழ்ந்து கூறப்படுகின்றது. ஆனால் நிர்வாக அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி இந்திய மக்களை எவ்வித விசாரணையுமின்றி நாடு கடத்திவிடுகின்றனர், பாதுகாப்பில் வைத்துவிடுகின்றனர். இவ்வித அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கும் ஆட்சி முறையைப்பற்றி என்ன கூறுவது? பிரிட்டிஷ் ஆட்சிக்குமுன் இந்திய நீதி நிர்வாகத்தில் எவ்வித குறைகளுமிருந்ததில்லையோவெனக் கேட்கப்படலாம். இதைப்பற்றி சரித்திரங்களில் நன்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. நமது முறைகளிலும் சிற்சில வழுக்கள் இருந்தனவென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டுவதுதான். அவற்றை மறைத்துப்பேசுவது சரித்திர உண்மைகளை மறைத்துப் பேசுவதாகும். குற்றவாளிகளெனப் படுவோரைச் சித்திரவதை செய்தல், பலவித கொடுமைகளுக்குள்ளாக்கல் முதலிய கெட்ட வழக்கங்கள் முன்னர் இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட காலத்தை மீண்டும் ஏற்படுத்த எவரும் விரும்பமாட்டார்கள். ஆயினும் இந்தியா இவ்விதமிருந்த காலத்தில் இதர தேசங்கள் எவ்வித முற்போக்கடைந்திருந்தன வென்று கவனிக்கவேண்டியது இன்றியமையாததாகும். கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் தங்களது ஆதிக்கத்தைச் சிறிது சிறிதாக பலப்படுத்திவந்தபொழுது மற்ற தேசங்கள் எவ்வித நாகரீகத்துடன் விளங்கின? 18ம் நூற்றாண்டில் பெக்காரிய எனும் பிரபல இத்தாலிய ஆசிரியர், ஐரோப்பிய இனத்தவர்களின் குற்ற விசாரணைச்சட்டங்களில் காணப்படும் கொடுந் தண்டனைகளைக் குறைக்கும்படி எல்லா ஐரோப்பிய இனத்தவர்களையும் வேண்டிக்கொண்டார். இங்கிலாந்தில் ஆரம்பகாலச் சட்டங்களில் சித்திரவதை செய்தல், பங்கப்படுத்தல், அங்கங்களை குறைத்தல் முதலிய பல கொடுந்தண்டனைகள் பிரதானமாகக் காணப்பட்டன. டியூடர் அரசர்கள காலத்திலும் ஸ்டூவர்ட் அரசர்கள் காலத்திலும் நியாயமன்றங்களுக்குச் செல்லாமல், பிரிவிகௌன்ஸிலில் சபையாரும் ஸ்டார் சேம்பர் எனும் சபையாருமே நிர்வாகப்படி சித்திரவதைசெய்யும்படி உத்திரவுகள் பிறப்பித்தல் வெகு ஸகஜமாயிருந்தது. சர்ச் எனும் தேவக்கோயில்களுக்கு ஜெபம்செய்யச் செல்லாததற்காகச் செவிகளை அறுத்துவிடுவார்கள். அங்ஙனம் அறுப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்கள் இன்னும் பத்திரப்படுத்தி இங்கிலாந்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்டூவர்ட் அரசர்கள் காலத்து இங்கிலாந்து தேச சரித்திரத்தைப் படித்திருப்பவர்களுக்கு டைடியஸ் ஓட்ஸ் என்பவர் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டாரென்பது நன்கு ஞாபகத்திலிருக்கும். 18ம் நூற்றாண்டிற்கு முன்னரும் பின்னரும், சாட்சியங்கள் பெறுவதற்காகவும், தண்டனையாகவும் பல கொடுமைகள் செய்யப்பட்ட விவரம் சட்ட அறிக்கைகளில் காணப்படுகின்றன. "கொடுமைகள் புரிதல், பலவகைகளிலும் துன்புறுத்தல் முதலியன சாதாரணச் சட்டங்களுக்கும் மாக்னகார்ட்டா சட்டத்திற்கும் விரோதமெனினும், விசேஷ அதிகாரத்தை உபயோகித்து அரசர்களும் பிரிவிகௌன்ஸிலில் ஸபையாரும் மேற்கூறியவாறு செய்யலாம்." (பாமர் என்பவர் எழுதிய 'குற்றமும் தண்டனைகளும்' எனும் நூலில் 32ம் பக்கத்தில் காணப்படுகிறது). பெயரளவில் மட்டிலும் துன்புறுத்தல் என்றில்லாத பலதண்டனைகளை சாதாரண சட்டங்கள் அனுமதித்து வந்தன. "ஒரு கைதி விளம்பகாரணமாக எதிர்வாதம் செய்யாமல் மௌனம் சாதிப்பானேயின், அவனை முதுகுப்புறம் கீழாகப்படுக்கச் செய்து அவன் மார்பில் அவன் தாங்கக்கூடிய அளவும் அதற்கு மேலாகவும் இரும்புப் பாரம் வைக்கப்படவேண்டுமென்றும், கெட்ட



ரொட்டிகளையும், கட்டுக்கடை தண்ணீரையும் ஒருநாள் விட்டு ஒருநாள் உட்கொள்ளும்படி செய்யப்படவேண்டுமென்றும் அவனுக்கு தண்டனை விதிக்கப்படும். அவன் தனது குற்றத்தை யொப்புக்கொள்ளும்வரை மேற்கூறிய தண்டனைக்கு உள்ளாயிருப்பான்." (ஸ்டீபன்ஸ் என்பவரால் எழுதப்பட்ட "குற்றச்சட்ட சரித்திரம்" எனும் நூல் முதலாவது புத்தகம் 297ம் பக்கத்திலும், என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா 27ம் புத்தகம் 76ம் பக்கத்திலும மேற்கூறிய விவரங்கள் காணப்படுகின்றன). 19ம் நூற்றாண்டு மத்தியகாலம் வரையிலும் பலவிதமான கொடுமைகள் இங்கிலாந்தில் நடந்து வந்தன. "தண்டனை சக்கரத்தில் குற்றவாளிகளெனப்படுவோரை நிறுத்தி அவமானப்படுத்துவது பிரபலமாயிருந்தது. 1816ம் வருஷம்வரை பலவிதமான குற்றவாளிகளுக்கும் இத்தண்டனை விதிக்கப்பட்டுவந்தது. 1837ம் வருஷம்வரை சிற்சில குற்றங்களுக்காக மட்டிலும் இம்முறை அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. 18ம் நூற்றாண்டில் ஜோவியம் கூறும் குற்றத்திற்காக ஸ்திரீகளுக்குங்கூட இத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது" (பைக் அவர்கள் இயற்றிய 'குற்ற சரித்திரம்' எனும் நூல் இரண்டாம் புத்தகம் 377—378ம் பக்கங்களில் காணப்படுகின்றது). ஸ்திரீகளுக்குக் கசையடி கொடுக்கும் வழக்கம் 1820ம் வருஷம்வரை நிறுத்தப்படவில்லை. "18ம் நூற்றாண்டு இறுதிவரையுங்கூட ஸ்திரீகளுக்கு கசையடி தண்டனை விதிக்கப்பட்டதென்பதற்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன." (பைக்ஸ் புத்தகம் 2, பக்கம் 380.) 1800ம் வருஷத்தில் மட்டிலும் மரண தண்டனை விதிக்கக்கூடிய 200 குற்றங்கள் புரியப்பட்டிருக்கின்றன. சட்ட விஷயங்களில் மனிதத்துவம் எங்கு நிறைந்து காணப்படுகிறதெனக் கவனிப்போமாயின் இந்திய நீதி நிர்வாக முறையையே சொல்லவேண்டும். இவ்வாறு கூறுவதற்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள் தங்களது தேசிய ஸ்தாபனங்களுக்கும் தங்களது மனிதத்துவக் கொள்கைகளுக்கும் விரோதமானவைகளெனக்கருதி வந்த இந்திய சட்டவிதிகளைப்பற்றி பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள் எழுதியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் ஆங்கிலச்சட்டங்களைப்பற்றி பல அறிஞர்கள் எழுதிய அரிய நூல்களில் காணப்படுபவைகளைக் கவனிப்பதாகக்காணோம்.

## இந்தியாவில் போலீஸ் நிர்வாகம்

சகலவிதங்களிலும் உபயோகமாயிருக்கக்கூடிய போலீஸ் நிர்வாகம் இந்தியப்புராதன ஆட்சிமுறையில் இருக்கிறதென ஸர் தாமஸ் மன்ரோ சென்ற நூற்றாண்டுத்துவக்கத்தில் எழுதியிருக்கிறார். "ஒவ்வொரு கிராமத்திலும் பரம்பரையாக காவற்காரர்களிருந்து வருகின்றனர் அக்கிராமவாசிகளின் சொத்துக்களையும், அக்கிராமங்கள் வழியாகச்செல்லும் வழிப்போக்கர்களின் சொத்துக்களையும் களவுபோகாமல் பாதுகாத்துக்கொடுக்கவேண்டுவது அவர்களது கடமை. ஏதாவது களவுகளோ கொள்ளைகளோ ஏற்பட்டுவிட்டால் திருட்டுப்போனசொத்துக்களைக்கண்டுபிடித்து அவ்வுடைமைகளை சொந்தக்காரர்களிடம் ஒப்புவிக்கவேண்டியதும் அவர்களது வேலையாகும். களவுகளைத் துலக்குவதில் அவர்களைப்போன்ற சாமர்த்தியம் வாய்ந்தவர்களை வேறெந்தேசத்திலும் காணவியலாது. இனாம் நில மானியத்திலிருந்து இவர்களுக்குப்பொருள் உதவப்படும். ஒவ்வொரு கிராமங்களிலுள்ள ஒவ்வொரு வீட்டாரும் ஓர் சிறு தொகை கொடுத்துதவுவார்கள். வழிப்போக்கர்களும் தங்களது உடைமைகளை இராக்காலங்களில் பாதுகாத்துக்கொடுப்பதற்காகச் சிறிது பணம் கொடுப்பார்கள். எந்த யுத்தம் நடந்தாலும் அல்லது எவ்வித தீங்கு நேர்ந்தாலும், தங்களது பரம்பரைத் தொழிலை அவர்கள் புறக்கணித்துவிடமாட்டார்கள். அக்கிராமங்களில் ஒரு தனி மனிதன் வசிக்கையிலுங்கூட அவர்கள் அங்கேயேதான் இருந்து வருவார்கள். கிராமங்களில் ஒருவருமே வசிப்பதில்லையென்ற நிலைமை யேற்பட்டுவிட்டால் தாங்களும் வேறிடம் செல்லுவார்கள்."

## கம்பெனியாரின் பிற்போக்கான முறை.

ஜெனரலயர்கள், ஜமீன்தார்களிடம் நிலவரிமுதலியவற்றை ஜனங்கள் சமர்ப்பிக்கவேண்டுமென்றும்,

ஜமீந்தார்கள் கிராமப்போலீஸ் நிர்வாகத்தைக் கண்காணித்து வரவேண்டுமென்றும் ஓர் நூதன முறையை ஏற்படுத்தினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் ஜமீந்தார்கள் செய்துவந்த போலீஸ் வேலைகளை அவர்கள் செய்யவேண்டுவதில்லையெனக் கூறி ஒரு புதிய முறையை யேற்படுத்தினர். இம்முறை கிராமாதிகாரிகளின் கௌரவத்தைக் குறைப்பதாகவிருந்தது. கிராமத்தில் களவு முதலியன நடைபெறாமல் பாதுகாத்து வந்தவர்கள் கிராம ஜனங்களின் ஊழியராகவிருந்ததுபோய் சொற்ப சம்பளம்பெறும் கம்பெனி ஊழியரெனும் நிலைமைக்கு இப்புதிய முறை அவர்களைக்கொண்டு வந்துவிட்டது. இம்முறை அதிக பணச்செலவிற்குக் காரணமாயிருந்ததேயன்றி அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. எல்பின்ஸ்டன், மன்ரோ முதலியவர்கள் செய்த முயற்சிகளின் பயனாக 1814ம் வருஷம் இம்முறை நிறுத்தப்பட்டது. பிரிட்டிஷார் இந்தியாவிற்குவந்த 200 வருஷங்களுக்குப் பிறகுதான், தக்ஸ்கள், பிண்டாரிகள் எனும் கொள்ளைக்கூட்டத்தவர்கள் கிளம்பினார்களென்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டுவது அவசியம்.

### தற்போதைய முறை.

தற்போதைய போலீஸ் நிர்வாகமுறை, சென்ற நூற்றாண்டு மத்திய காலத்தில்தான் இந்தியாவில் துவக்கப்பெற்றது. அயர்லாந்து போலீஸ் வர்க்கத்தைப்போலவே இந்தியாவிலும் ஏற்படுத்தப்பட்டது. கிராம காவலர்கள் ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளிடமிருந்து சம்பளம் பெற்றுவந்தனர். அவர்கள் (கிராம பாதுகாவலர்கள்) அடிக்கடி ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாற்றப்படுவார்கள். ஸ்திரமாக எக்கிராமத்திலும் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. முற்காலங்களில் அவர்களுக்கு ஒவ்வொரு வீட்டாரும் சம்பளம் கொடுத்துவந்தனர். இப்பொழுது அவர்கள் சுதந்தரமாகவிருப்பதால், கிராம ஜனங்களிடம் சம்பளம் வாங்கி ஜீவியம் நடத்தவேண்டிய அவசியமில்லாமலிருப்பதால் கிராமஜனங்களுக்குப் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ளுவதில்லை. அதிகாரிகளைத் திருப்திசெய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வருகின்றனர். கோர்ட்டு வழக்குகளின் விவரங்களடங்கிய அறிக்கைகளைப் போலீஸார் எவ்வாறு கொடுமையாக நடத்துகின்றனரென்பதும், அவர்களை எவ்வாறு துன்புறுத்துகின்றனரென்பதும், எவ்வாறு பொய்ச் சாட்சியங்கள் தயாரிக்கின்றனரென்பதும் இனிது விளங்கும். கர்ஸன் பிரபு இராஜப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் பிரிட்டிஷ் உயர்தர அதிகாரிகளுளொருவர், ஓர் சந்தர்ப்பத்தில் கூறியிருக்கும் வார்த்தைகள் வருமாறு:—" நமது போலீஸ் நிர்வாக முறையைப் பற்றி எல்லோருங்குறைகூறுகின்றனர். குறைகூறப்படாத அம்சமே கிடையாதெனக் கூறலாம். பொது ஜனங்களின் துன்பத்தை யகற்றக்கூடியதும், அரசாங்கத்தின் செல்வாக்கையும் கௌரவத்தையும் அதிகப்படுத்தக்கூடியதுமான அம்சம் எதுவையுங் காணோம். குற்றங்களைத் துலக்கிக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியர்களிடம் தான்யாவும் அடங்கியிருக்கின்றன. நமது போலீஸ் நிர்வாக முறை கண்டிக்கப்படுவதற்கு அவர்களே காரணம். அவர்கள் அயோக்கியர்களாகவும் பலவித கொடுமைகளைச் செய்பவர்களாகவு மிருக்கின்றனர்."

### இங்கிலாந்தின் நிலை

" அக்காலத்தில் அதாவது 1777-ம் வருஷம் இங்கிலாந்து மிகவும் பரிதாபகரமான நிலைமையிலிருந்தது. கொலை, களவு முதலியகுற்றங்கள் நிகழாத இடங்கிடையாது. கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் பொது ரஸ்தாக்களில் செய்துவந்த அட்டூழியங்களுக்கு ஓரளவில்லை. ரஸ்தாக்கள் வழியாக எவரும் ஸாவதானமாகச்செல்லவியலாது. கன்னக்களவு முதலியன நடைபெறாத நாளே கிடையாது. தெம்ஸ் நதியில் கொள்ளைக்காரர்கள் செய்துவந்த கொடுமைகளை எழுதிமுடியாது. போலீஸ் பாதுகாவலர்கள் திறமையற்றவர்களாக விருந்தனர் அவர்களை நம்ப முடியாது. அவர்களே பெரும்பாலும், கொள்ளைக்காரர்களுக்கும், திருடர்களுக்கும், கொலைஞர்களுக்கும் பெரிதும் உதவியாயிருந்து வந்திருக்கின்றனர். 19-ம் நூற்றாண்டுத்துவக்கத்தில் இங்கிலாந்தில் சராசரி ஜனத்தொகையில் 22 பேருக்கு ஒருகுற்றவாளி வீதம் இருந்துவந்திருக்கின்றனர்." (இவ்விவரம் ஆர்தர் கிரிபித் அவர்கள் எழுதிய என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா 21-ம் புத்தகம் 978-ம் பக்கத்தில் காணப்படுகிறது.)

(தொடரும்.)

# தொண்டர்.

[ஹ. சா. வேங்கடராம் ஐயர் எழுதியது.]

(30வது பக்கத் தொடர்ச்சி)

மேல் கீழ் என்ற வேறுபாடுகளைக் கனவிலும் கருதாத சமநோக்காளனாக இருக்கவேண்டியவன். இவற்றோடு தெய்வம் போற்றல், அரசர்க்கடங்கல், பெற்றோர்ப்பேணல், உண்மைஉரைத்தல், ஒற்றுமை கொள்ளல், சிக்கனம் பழகல், தூய்மையோடிருத்தல், அடங்கி நடத்தல், ஊழியம்புரிதல், மகிழ்ச்சியோடிருத்தல் என்ற முக்யமான கோட்பாடுகளையும் பின்பற்றி ஒழுகவேண்டியவன். அன்றியும் அவன் வாழ்க்கையிலே பெரிதும் பயன்படத் தக்கவாறு நீண்ட கயிற்றை அறுத்துவிடாமல் வேண்டிய அளவு காலத்திற்கு ஏற்றவாறு சுருக்கிக் கொள்வதாகிய "இடையர் முடிச்சு," பலவிதப் பருமனை உடைய கயிறுகளை ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளத் துணை செய்வதாகிய "வலையர் முடிச்சு" முதலியவற்றிற் பழகிக்கொள்ளல், வேற்றிடங்களிலும் வசதிக்குறைவான இடங்களிலும் தங்கியிருந்து நாட்களைச்சுகமாகக் கழிக்கப்பழகுதல், குறிப்பினால் செய்திகளை அறிவித்தல் முதலிய வேறு பல பழக்க முறைகளிலும் கற்பிக்கப்படுகிறான். மேலும், இம்முறையிலே பழக்கப்பட்டவர்கள் எவருக்கேனும் நோய் முதலிய சம்பவங்கள் நேர்ந்தால் அவரை வைத்தியர் வரும் வரையில் பேணிப்போற்றல், தீ நீர் ஆகியவற்றால் ஆகிய ஆபத்துக்களினின்றும் உயிர்களைக் காத்தல் என்றவற்றில் சில பெரியோர்களைப்போல் "நாம் அவருடன் அறிமுகம் செய்துவைக்கப்பட்டவர் அல்லர். ஆதலின், அவருக்கு எம்மால் ஏதும் இப்பொழுது உதவிபுரிய இயலவில்லை" என்று மறந்தும் எண்ணுதலும் செய்தல் கூடாது. அங்ஙனம் எண்ணிப் பராமுகமாக இருப்பின் அது கடமையை மறந்த பெரியதொரு குற்றச்செயலாகக் கருதப்படும். மேலும், அது வாக்குத்தத்தத்தை மீறியதுமாகும். இக்கொள்கைகளின்படி ஒழுக வேண்டியவர்கள் உடல் வன்மை, மன உறுதி என்றவற்றை மிக்குப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இங்ஙனம் சிறுவர்கள் பழக்கப்படுவதால் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்றபடி அவர்கள் தலைவர்களான பிறகும் இந்த நற்குணங்கள் அவர்களிடம் இருந்தே தீரும். அவற்றால் சாதி வேற்றுமைகளும், அதுபற்றிவரும் சண்டை சச்சரவுகளும் அழியும். ஒற்றுமைக்குணம் ஓங்கிவளரும். அழிவழக்குக்கள் ஒழியும். நம்பிக்கை வளர்ந்து இன்பம் பெருகும் இந்த முறை இன்னும் விரித்து உரைக்கப்படும். இங்கே, இம்முறையின் கோட்பாடுகளும், பிறவும் மனத்தில் இனிது பதிந்து மாணவர்க்குப் பயன் தருமாறு குறிக்கப்படும்

"தொண்டரீர் சோதரத் தொண்டரீர் யாண்டும்
தன்மதிப் பொன்றே முன்மதித் தென்றும்
தெய்வம் போற்றிச் செய்கடன் முற்றித்
தேச நலத்தைச் சிந்தையுட் பதித்தாய்
துலகினர்க் கிவனென் றற்றுழி உதவுவான்
ஆதரத் துழைக்கும் சோதரத் தொண்டரீர்
நம்முறு கடமையைச் செம்மையின் ஆய்ந்தே
கூறுவன் கேளீர் குவவயத் தவருக்
கென்றுநம் பிக்கை துன்றுமா றொழுகல்
தன்னம் பிக்கை கொண்டுமுன் நிற்றல்
மன்பதைக் கன்போ டின்புறற் குதவல்
உடன்பிறப் புணர்வைத் திடம்பெறக் காட்டல்
கள்ளந் தவிர்த்த உள்ளத் தடங்கல்
அயலவர் துயருக் குயிர்விடத் துணிதல்
அணியலாம் போழ்தும் பணிவுமீக் கொள்ளல்
துன்பம் பொறுத்தீண் டின்முகங் காட்டல்
தக்கதென் றுய்ந்து சிக்கனம் பேணல்
வாய்மை முதலாம் தூய்மையொ டிருத்தல்
என்றஇப் பத்தும் பிறவுமாம்
நன்றிவை கைவந் தொன்றிவாழ் குலமே"

என்ற பாட்டும் அறியத்தக்கதாகும்.

### தொண்டர் சாரணரா?

இங்ஙனம் சமூக ஊழியஞ் செய்யவேண்டிய தொண்டர் தொழிலினை மேற்கொள்ள வேண்டிப் பழக்கப்படுபவரை இக்காலத்துச் சிலர் "சாரணர்" என்று அழைக்கின்றனர். அங்ஙனம் அழைப்பது பிழைபட்டதாகும் என்பது சிறிது ஊன்றி நோக்குவார்க்கும் இனிது விளங்கும். சாரணர், ஒற்றர் என்பன ஒருபொருட் சொற்கள். இவற்றுள் ஒற்றர் என்ற சொல்லுக்கு ஆசிரியர் பரிமேலழகர் "தன் (அரசன்) கண் செல்லமாட்டாத பரப்பெல்லாம் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தன எல்லாம் (அறிந்து வந்து) உணர்த்துபவர்" என்று பொருள் விரித்து உரைப்பர். இந்த ஒற்றர் "அரசனுக்குத் தன் நாடு செலுத்துங்காலும், பிறர் நாடு கொள்ளுங்காலும் இன்றியமையாது" வேண்டப்படும் ஓர் உறுப்பினர் ஆவர். சாரணர் என்ற சொல்லை வடமொழியாகக் கொள்ளினும் இதே பொருளைத்தான் அது தரும் என்பது வடநூல் வல்லார் கருத்து. இதனால், சாரணர் என்பார் அரசனுக்குக் கண்போன்றவராகி ஆட்சிக்குத் துணைசெய்யும் குழுவினருள் ஒருவராவார் என்பது சொல்லாமலே அமையும். அன்றியும், அச்சாரணரோ பகை, நொதுமல் (அயலார்) களைப் பெற்றவர்; விருப்பு, வெறுப்பு உற்றவர்; பிறரால் ஏவப்படும் வேலைக்காரர்; மறைந்து ஒழுக வேண்டியவர்; தமராலும், பிறராலும் ஐயுறுதற்கு உரியவர்; பிறரது உதவியை--கூலியை--எதிர்பார்த்தே உயிர் வாழ்பவர். அதிகம் சொல்வானேன்? "ஏங்கோன் வாழ்ந்தினி தோங்குக அன்னன்--மேலோர் இன்னே வீழ்ந்தழிந் தொழிக" என்பதே அவரது உறுதியான கொள்கையாகும். இனித் தொண்டரோ அத்தகையினர் அல்லர். இவர் அனைவரிடத்திலும் நட்புரிமை பூண்டு ஒழுகுபவர்; யாவரையும் உடன்பிறப்பினராகக் கருதுபவர்; பிறர் வயப்படாத சுதந்தர புருஷர்; யாண்டும் வெளிப்படையாக நின்று பயன்கருதாது அயலார்க்குதவி புரிபவர்; எல்லோராலும் நம்பப்பட்டவர்; "தன் கையே தனக்கு உதவி" என்பதில் உறுதிகொண்டு உழைத்து உயிர் வாழ்பவர். பின்னும் கூறவானேன்? "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே--அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானப் பெருமான் அடிகளாரது திருவாக்கைப் பொன்னேபோற் போற்றி அதனைச் செய்கையிற் கொண்டுவர முயலுபவர். இவற்றால், சாரணர் என்பார் தொண்டர் என்ற தகுதிப்பாட்டினைப் பெறுதற்கு உரியர் அல்லர் என்பது ஒரு சிறிது புலனாகும். சாரணர் வேறு. தொண்டர் வேறு. சாரணர் ஒருதலைச்சார்பில் நின்று கூலிக்கு வேலை செய்பவர். தொண்டர் நடுநிலைச் சார்பில் நின்று பயன்கருதாது ஊழியம் புரிபவர். சாரணர் அரசியல் வேலையாளர். தொண்டர் சமூக ஊழியர்.

### தொண்டரது இன்றியமையாமை.

ஒரு நாடு சீருஞ் சிறப்பும் உற்றுச் செழுமையுடன் ஓங்கிவளர்ந்து நலம்பெறுதற்குத் துணைசெய்வன பல. அவற்றுள் மிக மேலானது ஊக்கமும் உள்ளக்கிளர்ச்சியும் மிக்க நன்மக்களைப் பெற்றிருத்தல். இன்றைக்குச் சிறியவர்களாக இருப்பவர்களே நாளைக்குத் தலைவர்களாக வர வேண்டியவர்கள். எந்த நாட்டிலே தலைவர்கள் பொறுப்புவாய்ந்த தந்நலத் தியாகசீலர்களாக அமையவில்லையோ அந்த நாட்டிலே இன்பமும் அமைதியும் நிலைபெறா. தலைவர்கள் இங்ஙனம் அமையவேண்டுமாயின் அதற்குச் சிறுவர்கள் இளமையிலே பழக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்பழக்கமும் வெறும் புத்தகப் படிப்பால் மாத்திரம் நிறைவேறுவ தொன்றன்று. செய்வதனால் நிறைவேறுவதாகும். "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்--சொல்லிய வண்ணம் செயல்"-என்பது நாயனார் திருவாக்கு. இனி, இங்ஙனம் சமூக ஊழியம் புரியவராகவே ஒவ்வொருவரும் அமையவேண்டியது மேலானதே. என்றாலும் அநுபவத்தில் அங்ஙனம் அமைதல் அருமையாகும். ஆதலின் ஒவ்வொரு நாட்டிலும் அதன் பரப்புக்கு ஏற்பச் சமூக ஊழியஞ்செய்யும் தொண்டரது குழுவோ அல்லது குழுக்களோ இருப்பது விரும்பத்தக்கதாம். இங்கே நமது நாட்டிலே ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் பெருமுயற்சியால் நிலை பெற்றுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தாரையும், புதுப்பாளையத்தில் சேலம் ஸ்ரீ சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் செய்துவரும் ஊழியத்தையும்



குறிப்பிடலாம். இந்நிலையில் "இத்தகைய கூட்டத்தினர் எதற்காக ஒரு நாட்டிற்கு இருத்தல்வேண்டும்? நாட்டினரைக் காக்கவும், போதிய உதவிகளைச் செய்யவும் அரசாங்கம் இருக்கின்றதே" என்று ஒரு சிலர் வினவுதல் கூடும். அவர் கூறுகிறபடி அரசாங்கம் இருப்பது உண்மையே. அது நாட்டினர்க்கு உதவிபுரியும் உரிமையினையும், கடமையினையும், ஆற்றலினையும் பெற்றுள்ளது என்பதும் உண்மையே எனினும், அந்த அரசாங்கம் முற்றிலும் தன்னரசு முறைமையில் நடைபெறுவதாக இருப்பினும்--அதுவும் சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய எல்லாத் துறைகளிலும் போதிய உதவிகளைச்செய்து உயர்த்தும் நிலைமையில் அமைதல் முடியாது. அக்காலத்தும் இத்தகைய சிறந்த தொண்டர் குழாங்களாலேதான் சமூக ஊழியம் சிறப்பாக நிறைவேற வேண்டிவரும். இவற்றால், ஒவ்வொரு நாட்டிற்கும் தந்நல மறுப்புடன் சமூக ஊழியம் புரியத்தக்க தொண்டர்கள் பலர் இருத்தல் இன்றியமையாத தொன்று என்பதும், அத்தகைய நாடே முன்னேற்றத்திற்கு உரியது என்பதும் இனிது விளங்காமற்போகா. இங்கே வேதத்தை ஓதி நிறுத்துந்தோறும் நமது பண்டைச் சான்றோர் "தேவர்காள் யாங்கள் திகழுமெல்லவர்க்கும்--ஊழியம் செய்து வண் உதவற்கு--உயிரொடு பலநாள் உலவி வாழ்குவமே" என்று வேண்டிக்கொள்வதும்,

"ஏவன்இவ் வுலகத் தெல்லாச் செயலையும்
தன்னல முழக்கோல் தன்னால் அளப்பவன்
தன்னையே போலப் பிறரையுந் 'தந்நலம்
கொண்டவர்' என்றீண் டெண்ணுங் குணத்தவன்
பிறருக் குதவுதல் என்னும் பேச்சைக்
கேட்பினு மச்சங் கொண்டுமெய் விதிர்ப்பவன்
நல்லோர் குழுவுக் கென்றுமே காதவன்
அவனே கோழை அந்தோ அவனால்
யாதுசெய் தற்காம் யாங்கவன் மானத்
தோன்றினர் கோழைஅத் தோமுறு குலமும்
குடியும் வகையும் படியும் பெரும்பே
றெய்துவ தெங்ஙன் இயலா தொருதலை
ஆதலின் அப்பழி அகற்றிப்
பூதலத் தூழியம் புரிந்து வாழ்குவமே."

என்ற கருத்துப்பட ஹிந்திமொழியில் ஸ்ரீதர்பாடக் என்பார் கூறிய தனிப்பாவும் அறியத்தக்கன. இவற்றோடு

"வேண்டுவ துலகின் வேலை செயப்பலர்
ஆண்டவ னடியே அவர்க்குச் சம்பளம்
பட்டம் வயது இவை பார்ப்பதோ இல்லை
அவரோ திருத்தக் காரர் ஆவர்
எனினும் பிறரைத் திருத்தற் கெண்ணார்
தம்மைத் திருத்தித் தாம் பிறர்க் குறுவழி
காட்டிக் கடவுட் காசினியோரிடத்து
அன்பு பூண்டைப்புல னடக்கி
அருளுரு வாகுத லாம்அவர் தொழிலே."

என்ற கருத்தடங்கிய ஸ்ரீராமதீர்த்தர் செய்தருளிய wanted என்ற தலைப்பில் உள்ள தனிப்பாவும்;

"உலகம் வேண்டுவது ஒன்றேயாகும்
எஃதெனிற் கேளீர் இயம்புவன் அதுதான்
அறிவும் ஒழுக்கும் அன்றே யார்க்கும்
அன்னம் முதலாத் துன்னிய பலவும்
கொடுத் துதவுவதாம் கொள்கையுமன்றே
எதனையும் அழியா தெழுதும் சீரிய
கைவன் மையும் அன்றே மெய்யோடு
உறுதியாய் உழைத்தலின் உள்ளம்
தளராது ஆமை ஆண்தன்மைசேர் மக்களே"

என்ற கருத்தடங்கிய wanted men என்ற தலைப்பில் வரும் ஓர் ஆங்கிலப் புலவரது தனிப்பாடலும் ஆராயத்தக்கன.

### தொண்டரது தகுதி

இங்ஙனம் அமைய ஒரு நாட்டினரிடை ஒற்றுமை உணர்ச்சியும், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் குணமும் பெருகி வளர்தல்வேண்டும். "ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்--செத்தாருள் வைக்கப் படும்", "ஒப்புரவினால்வரும் கேடெனின் அஃதொருவன்--விற்றுக்கோட் டக்க துடைத்து" என்பன திருக் குறட்பாக்கள். இவ்வாறு ஒரு சமூகம் மிக உயர்ந்த நிலைமையில் இருக்கின்றது என்பதை அச்சமூகத்தினிடத்துள்ள நோயின்மை, அறிவுடைமை, போதும் என்ற மனம், அமைதியான நிலைமை, உடன்பிறப் புணர்ச்சி, உயிர் ஞானம் முதலிய உயர்குணங்களும், நிலைமையும்

புலப்படுத்தும். இவற்றைப்பெற அச்சமூகம் தன்னிடத்திலுள்ள நோய்மூலம், அறிவின்மை, ஆடம்பரவிருப்பம், போர்க் குணம், பொறுமைக் குணம், போட்டி விருப்பம், உடல் ஞானம் முதலிய இழி குணங்கள் செயல்கள் இவற்றினின்றும் விடுபடல் வேண்டும். நாகரிகம் என்று கூறப்படும் நவநாகரிகப் பேய்வயப்பட்டு உழலாதிருத்தலும் இன்றியமையாததொன்றும். "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" என்பது பொதுமறை இவை வளரப் பகுத்தறிவு, ஒற்றுமை உணர்ச்சியில் உறுதி, இயற்கை வழி ஒழுகல் ஆதியன இன்றியமையாதவை. இவற்றுள் பகுத்தறிவு ஆராய்ந்தறியும் அறிவு என விரியும். அது "பொருள் இடம் காலம் வினை இடனறிந்தும்—இருள்தீர எண்ணிச் செயல்" "முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்—படுபயனும் பார்த்துச் செயல்" "குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்—யாது கொடுத்துங் கொளல்" என்று வரும் பொதுமறைப் புகழ்ப் பாக்களால் நன்கு அறியப்படும். ஒற்றுமை ஒன்றியிருக்கும் தன்மை என விரித்துரைக்கப்படுவது. ஒன்றியிருத்தல் பொருந்தியிருத்தல் எனப்படும். அஃதாவது மனம் மொழி செயல்களால் வேறுபடா திருத்தல். இது தம்மோடு பிறர் ஒற்றுமையா யிருத்தல் என்ற பொருளைத் தருவதன்று. பிறரோடு தாம் ஒற்றுமையா யிருப்பதென்றே பகுத்தோதப்படும். இஃது அயலாரிடத்திலுள்ள குற்றங்களை "நெல்லுக்கு உமி உண்டு நீர்க்கு நுரை உண்டு—புல் இதழ் பூவிற்கும் உண்டு" என்பதை உணர்ந்து அவற்றைப் பொருட்படுத்தாது அவரிடத்திலுள்ள நற்றங்களையே ஆராய்வதாலும், "பாய்பொடும் இன்னா பிரிவு" — "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்றவற்றைக் கடைப்பிடித்தலாலும் வளர்வதொன்றாகும். இயற்கைச்சட்டங்களைப் பின்பற்றி இயற்கை வழி ஒழுகுபவரே உடல் நலத்தைப்பெற்று இன்புறுபவர் ஆவர். அதற்குமாறாக நடப்பவர் உடல் நலங்கெட்டுத் துன்புற்று உழல்வர். தாமே துன்புறுவோர் எங்ஙனம் பிறர்க்கு உதவி புரியவல்லவர் ஆவர்? ஒருகாலும் ஆகார். பிறர்க்கு உதவிபுரிய முன்வருவோர் முதற்கண் தமது உடலை நிலம், நீர், தீ, வளி, வெளி என்ற ஐம்பெரும் பூதங்களுடன் செம்மையின் ஒன்றுவித்து நலனுறச்செய்து கோடல் வேண்டும் பிராணாயாமம் முதலிய வளிப்பயிற்சிகளிலும் கைவந்தவராகவும் அமைதல் வேண்டும். இவை கைவர மகாத்மா காந்தி அடிகளார் இயற்றியருளிய "ஆரோக்கியவழி" என்ற நூலும், அவ்வழித் தோன்றிய "ஆரோக்கிய மார்க்கப் பிரகாசம்" போன்ற வேறு பல நூல்களும் துணைசெய்தல் கூடும். இங்ஙனம் தம்மைப் பழக்கிக் கொண்டவரே தொண்டர் என்ற தகுதிப்பாட்டினைப் பெறுதற்கு உரியவராவர். இங்கே "தன்னைக் காத்துக்கொள்ளும் பயிற்சியைப் பெறுவிடில் வாழ்விலே இன்பம் இல்லை. ஒவ்வொருவருக்கும் தேவைகள் இருக்கின்றன அவற்றை அவர் அவரே பூர்த்திசெய்து கொள்ளல் வேண்டும். அதுதான் கற்றதன் பயனாவது. சாந்தி, தன்னம்பிக்கை, சுவாதீன புத்தி என்பன அதனால்தான் கைவருவன. இவை கைவந்தவரே உலகினருக்குத் தொண்டுபூண்டொழுகும் தகுதியினையுடைய தொண்டர் ஆவார்" என்ற நமது கவி அரசர் ரவீந்திரநாதரது வாக்கு கவனிக்கத்தக்கது. இனி, அன்னார், உள்ளும் புறமும் ஒத்த உண்மையான வாழ்க்கையினையே மேற்கொண்டவரா யிருத்தல் வேண்டும். ஆண்மையும் அஞ்சாமையும்மிக்கவராகவும், சிறப்புவகையாலன்றிப் பிறப்பு வகையால் மேல் கீழ் என்ற வேற்றுமைகளைப்பாராட்டாதவராகவும் பழகல்வேண்டும். "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா—செய்தொழில் வேற்றுமை யான்" "செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க--செய்யாமையானும் கெடும்" என்ற மறை மொழிகளுக்கேற்பச் செயல்களைச் செய்து வாழும் தகுதியினரா யிருத்தல்வேண்டும். புகழினையும் இகழினையும் பொருட்படுத்தல் தவறுடைத்தாம். இடுக்கண் வருங்கால் நகைமுகங் காட்டி அந்த இடும்பைக்கு இடும்பையைச் செய்யும் உறுதியாளராகி "இன்பம் விழையான் வினைவிழைவான்" என்றதற்கு இலக்கியமாகவும் அமைதல் நலம். அதிகம் விரிப்பானேன்? "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி, அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார், கருமமே கண்ணாயினார்" என்ற நீதிநெறி விளக்கத்தின் நிலைத்த மொழியையே தமக்குரிய மேல்வரிச்சட்டமாகக் கொண்டு ஒழுகுபவரே தொண்டராந் தகுதியைப்பெற்ற தூயராவர். (வரும்)



# தற்கால நிலைமை.

## ஓர் சம்பாஷணை.

[சாக்கோட்டை, ஸ்ரீமான் S. M. ராஜகோபாலய்யங்கார் எழுதியது]

(25வது பக்கம் தொடர்ச்சி)

தீக்ஷிதர் :— தாங்கள் ஹிந்து சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை என்றீர்கள். அதே ஹிந்து சாஸ்திரத்தை எடுத்துக் கொள்வோம். ஹிந்து மதத்திற்கு ஆதியானது வேதங்கள் நான்கும். அவற்றின் எல்லைக்குள்ளாக (அதாவது சுருதிக்குள்ளடங்கியது) ஸ்மிருதி அவ்வித ஸ்மிருதியை ஏற்படுத்தியவர்கள் பலர். அவர்கள் ஒவ்வொருவரும் பெரிய மஹான்கள் சுயநல மற்றவர்கள் அவர்கள் பாமர ஜனங்கள் நல்வழிபட்டு உலகவாழ்க்கையை செவ்வனே நடத்தக்கருதி காலத்திற்கேற்றவாறு ஒருநிபந்தனையும் நியதியும் ஏற்படுத்தினார்கள். ஒவ்வொரு ஸ்மிருதியிலும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு வர்ணாஸ்ரமங்களும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இன்ன இன்ன தொழில்தான் செய்யவேண்டும் நியதி ஏற்படுத்தினார்கள். அதன்பிறகு காலத்தின் போக்கினால் பல்வேறு ஜாதிப்பிரிவினைகளும் குண்டகோளகர்களும் கோளகுண்டகர்களும் மற்றும் பல்வகையினரும் ஏற்பட்டமை. வர்ணாச்ரமிகள் ஒவ்வொருவரும் அனுஷ்டிக்கவேண்டிய தொழில்களை விட்டுவிட்டு இதர வர்ணாச்ரமிகளின் தொழில்களில் அதிக்கிரமித்து பிரவேசித்து கைக்கொண்டனர். ஸ்வதர்மங்களை கைநழுவவிட்டுவிட்டனர். அவர்களில் ஒருவரையும் ஜாதிப்பிரஷ்டம் செய்யக்காணோம். அவ்விதம் செய்தவர்களை உல்லங்கனம் செய்யவுமில்லை. இன்னும் பார்க்கப்போனால் அவர்கள்தான் (அசாஸ்திரிகமான காரியங்களைச் செய்பவர்களாகவோ அல்லது அனுஷ்டிப்பவர்களாகவோ உள்ளவர்களுக்கு) அந்தஸ்தையோ அல்லது ஐவேஜியையோ கருதி கௌரவிக்கப்படுகின்றனர். இவ்விதம் உலக [illegible] இருக்கும் நிலைமையில் ஒன்றும் அறியாத அபலைகளாகிய கருவுதரியாத பெண்களை அவர்களின் பெற்றோர்கள் ஐவேஜியைக்கருதியோ அந்தஸ்தைக்கருதியோ அல்லது தரித்திரத்தின் கொடுமையினாலோ அவ்வித அபலைகளின் கருத்திற்கு மாறாகவோ அல்லது அவர்களுக்கு அறிவிக்காமலோ தங்களிஷ்டமான ஒருவர்க்கு மணஞ்செய்வித்து அவர்களுக்கு துர்அதிர்ஷ்டவசமாகவோ அல்லது வேறு காரணம்பற்றியோ வைதவ்யம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் சாகுமளவும் யாதொரு விதமான இல்லற சுகானுபவங்களை அவர்கள் அனுபவிக்கக்கூடாமல் செய்வது தர்மநியாயமாகுமா? மேலும் ஆடவர்களுக்கு ஒருதாரம் விவாகம்செய்துகொள்ளவேண்டியது இல்வாழ்க்கைக்கு அத்தியாவசிகமானது. அதற்குப்பிறகு எத்தனை தாரங்கள் வேண்டுமானாலும் அவர்கள் விவாகம்செய்துகொள்ளும்படி அனுமதித்துவிட்டு பெண்டிர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்துவது பக்ஷபாதமான நியாயமாகாதோ? அதுபோனாலும்போகட்டும் மகாத்மாஜீ சொல்வதில இந்தபாரத பூமியின் கண்ணுள்ள எல்லா விதவைகளும் புனர்விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தவில்லையே. அப்படி அவர் வற்புறுத்தியபோதிலும் அதற்குத்தான் எல்லோரும் (விதவைகளானவர்கள் யாவரும்) சம்மதிப்பார்களோ அதுவுமில்லை. ஆனால் அவர் தெரிவிப்பது யாதெனில் எவ்விதம் சாஸ்திரங்களை காலத்திற்கேற்றவாறு சுவாயம்பு முதல் வைத்தியநாததீக்ஷிதர் ஈறாக பல்வேறு பெரியோர்களால் அவ்வக்காலத்திற்கேற்றவாறு ஸ்மிருதிகளையும் சாஸ்திரவிதிகளையும் நியதிகளையும் ஏற்படுத்தினார்களோ அதுபோலவே தற்காலரீதியையனுஸரித்து மகாச்சாரியர்கள் பரியாலோசனைசெய்து விதிகள் ஏற்படுத்த முன்வரவேண்டுமென்றும் அவ்விதம் அவர்கள் முன்வராத்தயங்கினால் அக்காலத்தில் 21 வயதுக்கு மேற்பட்ட கற்றறிந்த மாணவர்கள்

பரியாலோசனை செய்து அவர்களுக்கு அவ்விதம் விதவைகளைப் புனர்விவாகம் செய்வது உசிதமென்று மனச்சாக்ஷிக்குத் தோன்றினால் அவ்விதவிதவா புனர்விவாகம் செய்துகொள்ளத் தயங்கவேண்டாம் என்றும் தெரிவிக்கிறார். தாங்கள் தயவுசெய்து பின்னும் சற்று யோஜிக்கவேண்டும். விதவைகளுக்கு புனர்விவாகமே கூடாதென்று வற்புறுத்தி அவர்கள் சம்மதத்திற்கு விரோதமாக நடத்தப்படுவதினால் சோரபுருஷர்களைத்தேடி அவர்களிடம் சுகானுபவங்களை சோரத்தனமாய் அநுபவித்து அதனால் சிசுஹத்தி முதலியபாபங்களை கொஞ்சங்கூட கருதாது செய்யும்படிவிட்டு உற்றார் நகைக்க ஊரார் பரிஹஸிக்க அரசாங்கத்தார் சட்டம் செலுத்த குலத்துக்கு ஹீனம் ஏற்பட ஹேதுவாக்கிக்கொள்வது உசிதமாகுமோ? விதவைகளில் விவாகஞ்செய்துகொள்ள சம்மதிப்பவர்களுடன்கூட விவாகம்செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்திக்கொள்ளட்டும் என்று ஏன் அச்சாஸ்திரத்தில் உபவிதி ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. அதைவிட்டு ஆடவர்கள் எவ்விதம் நடந்தபோதிலும் குற்றமில்லை தோஷமில்லை என்று குருட்டுத்தனமானபடி சாஸ்திரத்தை சந்தியிலிழுக்கிறது உசிதமாகுமா? நம்முடைய ஹிந்துமதமே அன்பை ஆகாரமாகக் கொண்டது அவ்விதமிருக்க ஒரு சாராரிடத்தில் மாத்திரம் துவேஷம் எதற்காகக்கொள்ளவேண்டும்.

சாஸ்திரிகள்:—சரி, அதிருக்கட்டும் இந்தவிஷயத்தைப்பற்றி நாமிருவரும் சர்ச்சைசெய்து முடிவு சொல்லமுடியுமா? எல்லாம காலக்ரமேணதானே முடிவடைந்துவிடும் அதையும் கவனிப்போம். அதிருக்கட்டும் இதற்குத்தான் இத்தனை பூர்வபீடிகையுடன் சொன்னீர்களே தீண்டாமை விலக்கு என்கிறீரே அதுவிஷயம் எப்படி.

தீக்ஷிதர் :—தாங்கள் சொல்லும் விஷயத்தைப்பற்றிச் சொல்வதற்குமுன் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் அதாவது அவர் எங்கேயோ எவ்விடத்திலோ பிரஸங்கம்செய்கையில் ஒரு வாக்கியத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு( அரசாங்கத்தார் 124, 153 செக்ஷன்படி குற்றம் சாட்டுவதுபோல்) நம் பெரியோர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அவர் உண்மையை உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்த சற்றேனும் அஞ்சார் என்பதை மனதில் எண்ணி அவர் தெரிவிக்கும் விஷயங்களை கருத்துடன் செலுத்தி ஆலோஜித்தால உண்மைவிளங்கும். அவர் பஞ்சமன் என்றும் தீண்டத்தகாதவன் என்றும் தனி ஜாதி கிடையாது செய்யத்தகாத குற்றங்களையோ தொழில்களையோ அநுஷ்டிப்பதனால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர் அவர்களுக்கு கல்வியறிவைவிருத்திசெய்து மதப்பற்று உண்டாகும்படி செய்வித்து இனி அவ்வித துஷ்கிருத்தியங்களை செய்விக்காமல் நல்லறிவு புகட்டி அவர்களைத் தாழ்மையாகக் கருதாமல் அவர்களையும் நம்மைப்போன்ற மனிதவர்க்கத்தில் பிறந்தவர்கள் தான் என்று அன்பாய் நடத்தவேண்டுமென்று தெரிவிக்கின்றார்கள் தற்காலத்தில் அக்கிரகாரத்தில் பிரபுக்கள் வீட்டில் விசேஷமாக நாய் வளர்க்கப்படுகிறது அந்த நாய்கள் அடுப்படிவரையில் போகவிடப்படுகின்றன அவற்றில் ஒரு முணுமுணுப்பையும் காணோம் வீட்டுத்திண்ணைகளில் பிரமதஸ்தர்கள் (முகம்மதியர்கள், கிரிஸ்துவர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் முதலாயினோர்கள்) உட்காரவும் நம்முடன் கூடவிருக்கவும் அனுமதிக்கப்படவில்லையா நம்முடைய வழிபடுங்கடவுளாகிய இந்துமதக்கடவுள்களை வழிபடுபவர்களாகிய தீண்டாதோர் எனப்படுபவர்கள்மாத்திரம் அக்கிரகாரத்தின் வழியேகூட நடந்துசெல்லக்கூடாதென்று சொல்லுதல் நியாயமோ தருமமாகுமோ. அவர்களை நாம் நடத்துவது எவ்விதமிருக்கிறதென்றால் “ஹே முட்டாள்களே! கவனமாய்க் கேள். எங்கள் வழிபடுங்கடவுளை எதுபரியந்தம் நீங்கள் வழிபடுகின்றீர்களோ அதுபரியந்தம் உங்களை இவ்விதம் தான் நடத்துவோம் பிரமதக்காரர்களாகிய முகம்மதியர் கிரிஸ்துவர் முதலானவர்களுடன்சேர்ந்து அவர்கள் மதத்தைத்தழுவி அவர்கள் வழிபடுங் கடவுளை நீங்களும் வழிபடுவீர்களாகில் உங்களை எங்களுடன் சமமாகபாவித்து நடத்திவருவோம் என்று சொல்லி நம்முடைய மதத்திலிருந்து அவர்களைப் பிடரியைப்பிடித்து வெளியே தள்ளி பிறமதங்களைத் தழுவும்படிசெய்து அதன் மூலம் நம்முடைய ஹிந்து மதத்தின் பெருமையையும் அன்பையும் கௌரவத்தையும் வழிபடுவோருடைய



ணியையும்குறைத்து நம்முடைய ஹிந்துமதத்தை குழிதோண்டிப் புதைத்து க்ஷீணதசைக்குக்கொண்டுவருதல் அழகாகுமோ என்பதை ஆலோசித்துப்பாருங்கள். நாயைத் தொடலாம் மனிதனைத் தொடக்கூடாதென்பது எவ்விதம் நியாயமாகுமோ, ஜாதிசண்டாளனிலும் கர்மசண்டாளன் ஹீனன் என்று சாஸ்திரம் முறையிடுகின்றதே சாஸ்திரம் சாஸ்திரம் என்று கவடி தூக்கிவரும் பெரியோர்கள் கர்மசண்டாளன் விஷயத்தில் என்ன செய்தார்கள். ஆகையால் தற்கால சாஸ்திரக்ஞர்கள் குற்றங்களை எடுத்துரைத்து காலத்திற்கேற்றவாறு சீர்திருத்தம் செய்துகொள்ளுங்களென்றும் தர்மம்நியாயம் அன்பு மதம் சாஸ்திரம்எல்லாவற்றிற்கும் அனுசரித்ததான முறையைச் செய்யுங்களென்றும் சொன்னால் விதண்டாவாதம் பேசுவதில் யாதுபயன் தீண்டத்தகாதோரெனப்படுவோர்களை நாம்சகோதரபாவத்துடன் நடத்தவில்லையென்று நமக்கு கெட்டபெயரை உலகினில் அடைகின்றோமேதவிர்த்து அவர்களை அரசாங்கத்தார் தூண்டுதல்செய்து நம்முடன் சமமாக பாவித்து நடவடிக்கைகள் நடத்தி அதன்மூலம் அவ்விததீண்டாதோர் எனப்படுபவர்களின் அன்பையும் அனுசரணையையும் அரசாங்கத்தார் அடைந்துகொண்டு விடுகின்றனர் நாமோ அவர்களின் கோபத்திற்கும் துவேஷத்திற்கும் பாத்திரமாகின்றோம் இவைகளை தவிர்த்து வேறுஏதேனும் லாபமுண்டோ இல்லை. அப்படியிருக்க ஏன்நாமே அவர்களாக அரசாங்கத்தாரின் உதவியைக்கொண்டு பலாத்காரமாக நம்மிடம் அணுகாது நம்முடைய அன்பினால் நாம் அவர்களை சமத்துவமாக நடத்தினோமென்று ஏற்படுத்திக்கொள்ளக்கூடாதென்பதுதான் மகாத்மாவின் கருத்து.

சாஸ்திரிகள்:—மகாத்மாஜி தற்சமயம் எவ்விடத்திலிருக்கிறார்? என்ன செய்துகொண்டிருக்கிறார்?

தீக்ஷிதர்:—இலங்கைத்தீவிற்குபோகிறதாக ஏற்பாடு செய்தார் ராஜப்பிரதிநிதி அவர்கள் மகாத்மாஜியை ஆலோஜிக்கவேண்டுமாய் அழைத்ததற்கிணங்கி ஸிம்லா நகருக்குப்போய் விட்டுபிறகு இலங்கையில் சுற்றுப்பிரயாணம்செய்துவிட்டு இப்போது ஆந்திர தேசத்தில் சிறிது சுற்றுப் பிரயாணம் செய்துவருகின்றார்.

சாஸ்திரிகள்:- இலங்கையில் என்னவிசேஷம்?

தீக்ஷிதர்:—இலங்கைவாசிகளின் அழைப்பிற்கிணங்கி அங்குசுற்றுப் பிரயாணம் நடத்தினார் இலங்கையில் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் கமிஷன்சம்பந்தமான யோஜனைகளை இலங்கைவாசிகள் மகாத்மாஜியை கலந்தாலோஜித்துக் கொண்டார்கள். மகாத்மாஜியின் சுற்றுப்பிரயாணத்தின் பலனாக இலங்கைவாசிகளில் பலர்கதர் ஆடை தரிக்கலானார்கள் கதர்நிதிக்கு சுமார் ஒரு லக்ஷம் ரூபாய்க்குமேல் இலங்கைவாசிகள் அளித்தார்கள்.

சாஸ்திரிகள்:—ஸிம்லாநகரத்திற்கு மகாத்மாஜியைவரவேண்டுமாய் ராஜப்பிரதிநிதியவர்கள் அழைத்தது எதற்காக? இவர்தான் அரசாங்கத்தின்விரோதி என்று சொல்லிவந்தார்களே!

தீக்ஷிதர்:—இப்போது இங்கிலாந்திலிருந்து வரும்பார்லிமெண்டு மகாசபையாரால் இந்தியாதேசத்திற்கு (பாரதபூமிக்கு) எவ்விதமான அரசியல் அமைப்பு ஏற்படுத்தலாமென்று ஆலோஜிக்கவேண்டி இந்திய அரசியல் கமிஷன் ஒன்று நியமித்து அவர்களால் விசாரணைசெய்து யாதாஸ்து அனுப்புமாறு செய்திருக்கிறார்கள் அதற்காக எதிர்கக்ஷிதலைவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துக்கொள்ள வேண்டியதற்காக தலைவர்களை வரவழைத்து ஆலோஜனைசெய்தார்கள்.

சாஸ்திரிகள்:—அப்படியாசமாசாரம். சரிதான் கமிஷன் என்றாலென்ன?

தீக்ஷிதர்:—கமிஷன் என்றால் மகாமேதாவிகளாகவும் மகாபுத்திமான்களாகவும் உள்ள பிரபலஸ்தர்களைக்கொண்டு பல்வேறு அபிப்பிராய பேதங்களுள்ள பலகக்ஷிதலைவர்களையும் விசாரணைசெய்து எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து வெகுஜனவாக்கிற்கும் வெகுஜன ஸம்மதத்திற்கும் ஒத்ததாகவுள்ள அபிப்பிராயத்தை தங்கள் புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமாகவுள்ளபடி ஒரு யாதாஸ்தை தயாரித்து பார்லிமெண்டு மகாசபையாரிடம் சமர்ப்பிக்கும்படிசெய்வது. அச்சபையார் பரிசீலனைசெய்து யுக்தாயுக்தமறிந்து சட்டமியற்றுவார்கள்.

சாஸ்திரிகள்:—அப்படியானால் இப்போது கமிஷனில் ஏற்பட்டிருக்கும் மேதாவிகள் எப்படி?

223488

தீக்ஷிதர்:—இப்போது ஏற்பட்டிருக்கும் கமிஷனில் எல்லோரும் ஆங்கிலேயர்கள் இந்தியர்களே கிடையாது. அவர்களில் ஒருவர்க்கேனும் பாரத பூமியின் அனுபவமாவது பழக்க வழக்கங்களாவது ஒன்றுமே தெரியாது. அவர்களில் ஒருவர் சட்டப் பயிற்சியில் மகாமேதாவி. அவரைத் தவிர்த்த மற்றவர்களுக்கு எனக்கு எவ்வளவு பிரக்கியாதியோ அவ்வளவேதான் அவர்களுக்கும்.

சாஸ்திரிகள்:—ஏன் இந்தியர்களை கமிஷனில் நியமிக்கவில்லை இவர்களுக்கு யோக்கியதாம்சமில்லையா. அப்படி நியமிக்காமலிருப்பதால் அவர்களுக்கு என்ன சௌகரியம்.

தீக்ஷிதர்:—யோக்கியதாம்சத்தைப்பற்றிய கேள்வியே கிடையாது. இந்தியாவை ஆங்கிலேயர்கள் தர்மகர்த்தாக்களாக பரிபாலித்து வருகின்றார்களாம். இந்தியாவில் கக்ஷிச்சண்டைகளும் ஜாதிச்சண்டைகளும் ஏராளமாக இருந்துவருகிறதாம். எவரையேனும் இந்தியர்களை நியமித்தால் ஒருவருக்கொருவர் இன்னும் ஜாஸ்தி சண்டையிட்டுக் கொள்ளுவார்களாம். தாழ்ந்த வகுப்பினரிடம் அனுதாபமிருக்காதாம் பாரபக்ஷமாக நடந்துவிடுவார்களாம் மேலும் இந்தியா ஆளப்படும் தேசமாம் அதன் உரிமையை நிர்த்தாரணம் செய்ய ஆளுவோராகிய பிரிட்டிஷாருக்குத்தான் பாத்யமுண்டாம்.

சாஸ்திரிகள்:—பேஷ்! பேஷ்! மிகவும் நன்றாகயிருக்கிறது. ஆடுநனைகின்றதென்று ஓநாய் அழுதகதைபோலிருக்கிறதே. நமக்கிருக்கிறகுறைகளை நிவர்த்திக்கும்மார்க்கம் நமக்குத் தெரியாமல் தேசம் வேறு பாஷை வேறு, நடை வேறு, உடை வேறு, வழக்கம் வேறு, பழக்கம் வேறு இத்யாதி வித்தியாசங்களுடன் கூடியவர்களுக்குத்தான் தெரியும்போலிருக்கின்றது.

தீக்ஷிதர்:—உண்மையான காரணம் இவையல்ல அவர்களுக்கு நம் பாரத தேசத்தைக் கொண்டுதான் உண்ணஉணவு இல்வாழ்க்கைக்குச் சாதகமான பொருள். பொருள்களை விற்கிறதற்கு வியாபார ஸ்தலம் இவைகள் நடக்கவேண்டியிருக்கிறது. இந்த தேசமில்லாவிட்டால் அவர்கள்பாடு திண்டாட்டமதான் ஆகையால் இதை வெகு ஜனவாக்குப்படி நடத்தும்படி விட்டுவிட இஷ்டமில்லாதவர்களாகவிருக்கின்றார்கள் இவ்விஷயத்தை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. இந்தியர்களை கமிஷனில் ஏற்படுத்தினால் அவர்கள் இந்த விஷயத்தை அம்பலத்தில் விட்டுவிடுவார்கள்.

இத்யாதி காரணங்களினால்தான் ஆங்கிலேயர்கள் மாத்திரம் கமிஷனில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சாஸ்திரிகள்:—அப்படியானால் இந்த கமிஷன் விசாரணையினால் என்ன ஸாதகமுண்டாகப்போகிறது. எதற்காக அவர்கள் விசாரணை ஆடம்பரம் இவைகளெல்லாம்?

தீக்ஷிதர்:—அயல்வீட்டுக்காரன் மெச்சிக்கொள்ளச்செய்யப்படும் காரியம்தான். இதர தேசத்தார்கள் இந்தியாவின் விஷயமாய் கவனிக்கவில்லையே என்று வாய்பளக்காமலிருப்பதற்காக இந்த படாடோபங்களெல்லாம் நடக்கிறது

சாஸ்திரிகள்:— நம்முடைய தேசத்தலைவர்களின் அபிப்பிராயம் எவ்விதமிருக்கிறது?

தீக்ஷிதர்:—நம்முடைய தேசத் தலைவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து விகிதமுள்ளவர்கள் இந்த கமிஷன் நியமனம் நம்முடைய தேசத்துக்கே பெரிய அவமானம். இதனிடம் நாம் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று எல்லாக்கக்ஷியினரும் ஏகோபித்து அபிப்பிராயப்படுகின்றார்கள் அரசியல் சம்மந்தமாய் நம்முடைய கோரிக்கையை சமீபத்தில் அதாவது டிஸம்பர்மீ 26உயில் மதராஸில் நடக்கப்போகும் இந்தியக்காங்கிரஸ் மகாநாட்டில் யோஜித்து நம்முடைய முடிவான அபிப்பிராயத்தையும் அரசியல் அமைப்பு யாதாஸ்தையும் அனுப்பிவிடுகிறதென்றும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனை எல்லோரும் பகிஷ்கரித்துவிட வேண்டியதென்றும் தீர்மானித்து அதற்காக எல்லா கக்ஷித்தலைவர்களுமடங்கிய கமிட்டியொன்று ஏற்படுத்தி பகிஷ்காரப் பிரசாரம் வெகு மும்முரமாகச்செய்து வருகின்றார்கள். அதற்கு ஆங்கிலேய மாதுவாகிய டாக்டர் அன்னிபெசண்டு அம்மையார் தீவிர முயற்சியெடுத்து தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்துமுடித்துவிட்டார்கள் எல்லாம் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்னும் பழமொழிக்கேற்ப காங்கிரஸ் ஆகிய பிறகு தெரிந்துவிடும். வந்தேமாதரம்



# கர்ணங்களின் மகஜர்.

## சென்னை மாகாண கவர்ன்மெண்டார் அவர்களுக்கு தஞ்சாவூர் தாலூகா கர்ணங்கள் எழுதிக்கொண்ட மிமோரியல்.

1 கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணங்களுக்கும் கிராமமுன்சீப்புகளுக்கும் தொன்றுதொட்டு அவரவர்களுடைய உழைப்புக்குத்தக்கபடி கர்ணங்களுக்கு கிராமமுன்சீப்புகளைக்காட்டிலும் அதிக சம்பளம் ஏற்பட்டு அந்தப்படி வேலைபார்த்து வந்திருக்கிறார்கள்.

2 கிராம உத்தியோகஸ்தர்கள், அகவிலை ஏற்றத்தை முன்னிட்டு சம்பள உயர்வு செய்யவேண்டி கவர்ன்மெண்டாரவர்களுக்கு தெரிவித்துக்கொண்டதில் கர்ணங்களுக்கு ரூ 15 கொடுத்திருப்பதாயும் கிராமமுன்சீப்புகள் கௌரவ உத்தியோகஸ்தர்களென்றும் அவர்களுக்கு சம்பள உயர்வு அவசியமில்லையென்றும் G O $\frac{499}{1920}$ நெ. உத்திரவாகியிருக்கிறது.

3 15—8—22உ யுள்ள 1482-நெ. கவர்ன்மெண்டு ஆர்டரில் கிராமமுன்சீப்புகளுக்கும் ரூ 15. சாங்ஷனாகி அந்தப்படி மேல்கண்டவர்களும் பெற்று வேலை பார்த்துவருகிறார்கள். கிராமமுன்சீப்புகளுக்கு இப்பொழுது கவர்ன்மெண்டாரவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷ கௌரவங்களுடன் கர்ணங்களுடைய உழைப்புக்கு சமமான சம்பளமும் கிடைத்து அனுபவித்து வருகிறார்கள். கர்ணங்களுக்கும் கிராமமுன்சீப்புகளைக் காட்டிலும் பழைய ஏற்பாட்டின்படியே அதிகச் சம்பளம் கிடைக்குமென்று நினைத்திருந்தார்கள் ஆனால் கர்ணங்களுடைய விஷயம் கவனிக்கப்படாததால் இரு இனத்தாரும் சமமான சம்பளம்பெற்று வேலைபார்த்துவருகிறார்கள். (அதை இப்பொழுது 13, 14 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது)

4 இப்பொழுது சம்பள உயர்வு கொடுத்திருக்கிற விஷயங்களை சற்று யோஜித்து பார்க்குமளவில் ரூ 5, 6, 7, 8, 10 பெற்றுவந்த கிராமமுன்சீப்புகளுக்கும் ரூ 15. ரூ 8, 10, 12, 15 பெற்றுவந்த கர்ணங்களுக்கும் ரூ 15. என்பதாய் வித்தியாசமில்லாமல் சமமானசம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலேகண்ட அம்சத்தை கவனித்து பார்க்குமளவில் கிராமமுன்சீப்புகளுக்கு சம்பள உயர்வு கொடுத்திருப்பதைக்காட்டிலும் கர்ணங்களுக்கு குறைவாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமமுன்சீப்புகளைப்போல் கர்ணங்களுக்கும் கொடுத்திருந்தால், அடியில் கண்டபடி சம்பளம் கொடுக்கவேணும். அதாவது கிராமமுன்சீப்புகளில் குறைந்த சம்பளமாகிய ரூ 5 பெற்றுவந்த ஒரு கிராமமுன்சீப்புக்கு ரூ15 கிடைத்திருக்கிறதினால் கர்ணங்களில் குறைந்த சம்பளமாகிய ரூ. 8 பெற்றுவந்த ஒரு கர்ணத்துக்கு ரூ. 24 கொடுக்கவேண்டும். கிராமமுன்சீப்புகளில் உயர்ந்த சம்பளமாகிய ரூ. 10 பெற்றுவந்த ஒரு கிராமமுன்சீப்பு இப்பொழுது ரூ. 15 பெற்றுவருகிறார். ஆனால் கர்ணங்களில் ரூ. 15 பெற்றுவந்த ஒரு கர்ணத்துக்கு சம்பள உயர்வேயில்லை. மேல்கண்ட இரு இனத்தாரும் சம்பள உயர்வு கொடுப்பதிலேயே பாரபக்ஷம் ஏற்பட்டது கர்ணங்களுடைய துர்பாக்கியமேயொழிய வேறில்லை.

5 கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணங்களுடைய வேலையைப்பற்றியும், கிராமமுன்சீபுகளினுடைய வேலையைப்பற்றியும் சீர்தூக்கிபார்க்குமளவில் கர்ணங்களுடைய வேலை எந்த விதத்திலும் கிராமமுன்சீபுகளைவிட ½-மடங்காவது ஜாஸ்தி யென்பது ஒருவராலும் மறுக்கத்தக்கதல்ல. மேல்கண்ட விஷயமாய் சந்தேகம் ஏற்பட்டாலும் ஒரு கமிட்டி நியமனம் செய்து விசாரணை செய்தாலாவது அல்லது அந்தந்த ஜில்லா கலெக்டர் அவர்களை அபிப்பிராயம் கேட்டாலும் உண்மை விளங்கும்.

6 தவிரவும் காலக்கிரமத்தில லாண்டு ரிகார்டு டிபார்ட்டுமெண்டு ஏற்பட்டதிலிருந்தும், கிராமங்களை ஒன்று சேர்ப்பதிலிருந்தும் ரீசெட்டில்மெண்டு செய்ததினாலும் கர்ணங்களுடைய வேலை ஒன்றுக்கு இருமடங்கு அதிகரித்திருக்கிறது.

7 ஆகையால் இரு இனத்தாருக்கும் சமமான சம்பளம் கொடுத்திருப்பதானது எந்த விதத்திலும் பொருத்தமல்லவென்றும் துணிந்து தெரிவித்துக்கொள்ளுவதுடன் கர்ணங்கள் தங்களுடைய வேலையை நீதியாயும், துரோகமில்லாமலும் காலாகாலத்தில் வேலைபார்த்துவரவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

8 ஆனால் இவர்களுடைய சம்பள உயர்வு விஷயமாய் சட்டசபையில் ஆலோசனைக்கு வரும் சந்தர்ப்பங்களில் பட்ஜட்டுகளில் தொகை இல்லையென்று பல தடவைகளிலும் தீர்மானம் நிறைவேறாமல் தோற்றுப்போய்விட்டது. பட்ஜட்டில் பணத்தை மீர்த்துக்காட்டவேண்டியது சம்பளம் கேழ்க்கிறவர்களுடைய கடமையாய் நினைப்பதால் நாங்கள் கீழ்க்கண்ட லாபங்களிலிருந்தாவது கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

I. ரீசெட்டில் மெண்டில் ஜாஸ்தி.

II. மிஸ்லேனியஸ் தீர்வைகளில் ஜாஸ்தி.

III. சிப்பந்திகளை குறைத்ததிலும் மீர்ந்த தொகைகள்.

(இவைகளுக்கெல்லாம் கர்ணங்களுடைய உழைப்பே முக்கிய காரணமாயிருந்ததென்பது நாங்கள் தெரிவித்துக் கொள்ளாமலே விளங்கும்.)

9 இப்பொழுது கிராம சிப்பந்திகள் கிராமத்தில் வருமானத்தையோ ஜனத்தொகையையோ அனுசரித்து 2, 3, 4, 5 பேர்களிருந்து வேலை பார்த்து சம்பளம் பெற்று வருகிறார்கள். இவர்களில் 3, 4' 5 ஆசாமிகளிருந்து வேலைபார்க்கும் கிராமங்களில் கர்ணம் கிராம முன்ஸீப்பு இருவருக்கும் தலா ஒருசிப்பந்தியைக்கொண்டு முக்கியமான வேலைகளெல்லாம் நடந்துவருகிறதேயொழிய ஜாஸ்தியாயிருக்கிற ஆசாமிகளைக்கொண்டு வேலை ஒன்றும் நடக்கிறதே இல்லை. சர்க்காரில் ஏற்பட்டிருக்கிற திட்ட ஆசாமிகளை ஏன் காலியாக வைக்கவேண்டுமென்று நினைத்து ஒருவனை நியமனம் செய்தால் அவன் தன் குடும்பவேலை முழுதும் பார்த்தபிறகு ஒழிந்தவேளைகளில் சர்க்கார்வேலை பார்த்து வருகிறான். மேலே கண்ட மாதிரியான ஆசாமிகளிருந்தும் இல்லாததும் ஒன்றே. தவிரவும் எங்களுக்கு ஏற்படுகிற அவசர வேலைகளிலும் அதிக சிப்பந்திகள் தேவையான காலங்களிலும் மேலதிகாரிகள் முகாம் செய்கிற காலங்களிலும் வேலை குதாவடையில்லாமல் நடக்கும்பொருட்டு இதர மனிதர்களைக் கொண்டுவேலைபார்த்துவருகிறோமேயொழிய ஒருவட்டத்துக்கு ஏற்பட்ட எல்லா ஆசாமிகளும் கூட இருந்து சர்க்கார் வேலைகள் முழுதும் நடந்து வருகிறதில்லையென்று நிதர்சனமாய் ரூபிக்கிறோம்.

10 1900 வருஷத்தில் ஏற்பட்ட கிராம சீர்திருத்தத்தில் ஒரு வட்டத்துக்கு குறைந்தது 2-முதல் 8-சிப்பந்திகள் வரையில் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் சென்ற இரண்டு வருஷங்களில் விசேஷ ஆசாமிகள் எடுக்கப்பட்ட பிறகும் யாதொரு புகாருமில்லாமல் கிராமத்திய சர்க்கார் காரியங்கள் ஒழுங்காகவே நடந்து வருகிறது. தவிரவும் மாதமுழுமையும் முகாம் செய்துகொண்டுகிராமவாரியாய் வேலைபார்த்துவரும் ரிவினியூ இன்ஸ்பெக்டர் சானிடரி இன்ஸ்பெக்டர் போஸ்டல் இன்ஸ்பெக்டர் ஆப்காரி இன்ஸ்பெக்டர் ஓவர்ஸியர் இன்னும் பல உத்தியோகஸ்தர்களும் ஒரு சேவகனை வைத்துக்கொண்டு வேலை பார்த்து வருகிறார்கள்.

11 ஆகையால் கிராமத்தில் ஸ்திரமாக இருந்து கொண்டு நிர்ப்பந்தமில்லாமல் தங்கள் சௌகரியம் போல் வேலைபார்த்துவரும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு தலா ஒரு சிப்பந்தி முற்றிலும் போதுமானதாயிருக்கிறது. மேல்கண்டபடியே வட்டத்திற்கு ஒரு சிப்பந்தியை வைத்துக்கொண்டு 1900வருஷத்திற்கு முந்தின வரையில் வேலைபார்த்து வந்திருக்கிறார்கள். இது விஷயமாய் அதிக ஆசாமிகள் தேவையென்று யாராவது ஆட்சேபித்தால் அவர்களுடைய குடும்ப வேலைகளும் சரிவர நடப்பதை முன்னிட்டே ஆக்ஷேபிக்க வேண்டியதாயிருக்குமே யொழிய வேறில்லை. சில குறிப்பிட்ட இடங்களில் அதிகவேலை ஏற்பட்டால் அந்த சமயத்தில் கூலி ஆட்களைக்கொண்டு வேலைசெய்து லாண்டு ரிகார்டு டிபார்ட்மெண்டில் நடந்தபடி தனியில் செய்து தொகை பெற்றுக் கொள்ளலாம். எப்பொழுதோ அதிக வேலை ஏற்படுமென்று நினைத்து வருஷமுழுமையும் சம்பளம் கொடுத்து அதிக ஆசாமிகளை வைத்துக்கொள்ள வேண்டியதில்லையென்றும் இது விஷயமாய் சந்தேகம் ஏற்பட்டால் ஒரு கமிட்டி நியமித்து விசாரணை செய்து முடிவுசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

12 ஆகையால் ஒவ்வொரு வட்டத்திற்கும் கிராம முன்ஸீப்புக்கு ஒரு தலையாரியையும் கர்ணத்துக்கு ஒரு வெட்டியையும் வைத்துவிட்டு அதிகமாயிருக்கிற சிப்பந்திகளை அடியோடு எடுத்து அதினால் மீரக்கூடிய தொகைகளிலிருந்தாவது ரீசெட்டில்மெண்டிலும் ஜாஸ்திசெய்ததினால் ஏற்பட்டிருக்கிற தொகைகளிலிருந்தாவது கிராமங்களில் சொந்தமாய் பூஸ்திதி இல்லாமலும் பரம்பரை பாத்தியமில்லாமலும் வேறு தொழில் பார்க்கமுடியாமல் சதாகாலமும் கிராமத்திலேயே அதிகாரிகள் வரவை எதிர்பார்த்து கர்ணம் வேலையையே நம்பி காலக்ஷேபம் செய்துவரும் கர்ணங்களுக்கு ரூ. 30. சம்பளம் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

(55-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

தான் நர்புவதாகவும், இரண்டு ஜில்லாக்களுக்கும் திருப்திகரமாக முடிவுசெய்ய, இரண்டு ஜில்லாக்களுடைய மிராசுதார்களும் ஜாயிண்டாக ஒரு மகாநாடு கூட்டி மேற்படி மகாநாட்டில் அவரவர்கள் தங்களுடைய குறைகளை விரிவாக பேசி முடிவு செய்யவேண்டும் என்று சொல்லிமுடித்தார். பேட்டிகாண வந்திருந்த இரண்டு ஜில்லா பிரதிநிதிகளும் சீப் இஞ்சினீர் தெரிவித்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு வந்தனம் செலுத்தினார்கள். மேற்படி உத்தேசிக்கப்பட்ட ஜாயிண்டு மிராசுதார்கள் மகாநாடுசீக்கிரத்தில் கூட்டப்படும் என்று தெரியவருகிறது.



# மிராசுதார்களின் குறைகள்.

## சீப் இஞ்சினீரை பேட்டிகண்ட விபரம்.

சீயாழி தாலூகாவிலும், மாயவரம் தாலூகாவின் வடமேற்கு பாகத்திலும், தெற்கு ராஜன் வாய்க்கால், மண்ணியாறு, பழவாறு பாய்கின்ற மிராசுதார்களின் சார்பாக சீயாழி மாயவரம் தாலுக்காக்களில் பிரபல மிராசுதார்களாகிய, குப்பியம் ஸ்ரீமான் திருநாராயணபிள்ளை, குன்னம் ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய அய்யர், சீயாழி ஸ்ரீமான் சுப்பராய முதலியார், குமாரக்குடி ஸ்ரீமான் டி சேவியர் முதலியவர்கள் 8—12—27 மாலை 4மணிக்கு லோயரணைக்கட்டில் முசாபரி பங்களாவில் முகாம் செய்திருந்த சென்னை கவர்ன்மெண்டின் சீப் இஞ்சினீர் மிஸ்டர் ஆர். எப் ஸ்டோனியை பேட்டிகண்டு நீர்ப்பாசன விஷயமாகத் தங்களுக்குள்ள குறைகளை தெரிவித்துக்கொண்டனர். அதில் முக்கியமாக, அப்பர் அணைக்கட்டையும் கிராண்டு அணைக்கட்டையும் புதுப்பிக்க ஆரம்பித்ததிலிருந்துதான் தங்களுக்கு நீர்ப்பாசனத்திற்குப் போதுமான ஜலம் இல்லாமல் கஷ்டம் ஏற்பட்ட தென்றும், 1924-ம் வருஷம் உடைப்பு ஏற்பட்டபொழுது பாமரத்து இலாகா அதிகாரிகள் வடக்கு ராஜன் வாய்க்காலில் மட்டும் ஷட்டர்களைத்திறந்துவைத்துவிட்டு தெற்கு ராஜன் வாய்க்காலில் திறக்காமலே வைத்து இருந்துவிட்டு தற்பொழுது கொள்ளடத்திலிருந்து தெற்கு ராஜன் வாய்க்காலுக்கு ஜாஸ்தியான ஜலம் சாதாரணமாகப் பாய்வதாகவும், அதைத்தடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள் என்றும், கவர்ன்மெண்டின் நிர்வாக சபை அங்கத்தினராகிய ஸர் சி. பி இராமசாமி அய்யரிடமும், சூப்ரண்டெண்டிங் இஞ்சினீயரிடமும் தெற்கு வடக்கு ராஜன் வாய்க்காலில் முறை ஜலம்விடும் விஷயமாக தெற்கு ராஜன் வாய்க்காலில் போதுமான ஜலம் வராததால் நிரம்பவும் ஜாஸ்தியான கஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்துக்கொண்டதின்பேரில், பாய்ச்சல்முறை விஷயமாக சமீபத்தில் சூப்ரண்டண்டிங் இஞ்சினீரால் அனுப்பப்பட்ட உத்திரவிற்குப் பிறகும், தெற்கு ராஜன் வாய்க்கால் பாயும் சுமார் 1000 ஏகராவிற்குமேல் நஞ்சை நிலங்கள் இதுவரையில் ஜலத்தட்டுனால் சாகுபடி ஆகாமல் பாக்கியாய் கிடக்கிறதினால் இனிமேல் லோயர் அணைக்கட்டில் அந்தந்த ஆற்றுக்குப் போதுமான ஜலம் விடுவதற்கு ஏற்பாடு செய்யவேணும் என் கேட்டுக்கொண்டு, கீழ்கண்ட சீர்திருத்தங் செய்யலாம் என்று அபிப்பிராயப்பட்டார்கள்

(1) சாதாரணமாக ஜலம் வரும்காலத்தில் லோயர அணைக்கட்டில் பிரியும் நான்கு முக்கிய வாய்க்கால்களாகிய தெற்குராஜன், கொமுக்குமன்னி வடவார், வடக்குராஜன் ஆகியவைகளுக்கு அந்தந்த வாய்க்கால்கள் மூலம் பாயும் ஆயக்கட்டுகளுக்கு தகுந்தபடி ஜலம்விடும்போது, தெற்குராஜன் வாய்க்கால் தற்பொழுது இருக்கும் கேவலமான ஸ்திதியையும் வடவாறும், வடக்குராஜன் வாய்க்காலும் சமீபத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருப்பதினாலும் தெற்குராஜன் வாய்க்கால் மூலம் பாயும் நிலங்களுக்கு போதுமானபடி ஜலம் பாயும்படியாக தெற்குராஜன் வாய்க்காலில் ஜலம் விடப்படவேண்டும்.

(2) ஜாஸ்தியான ஜலம் வரும்போது பழவார் கான்சாஹேப் வாய்க்கால் இவைகளுக்கு பாய சௌகரியமாக வடக்குராஜன் தெற்குராஜன் வாய்க்கால்களில் ஜாஸ்தியான ஜலம் விடப்படவேண்டும்.

(3) தெற்கு ராஜன் வாய்க்காலானது நிரம்பவும் மேடிட்டுஇருப்பதால் அதை பழய ஸ்திதிக்கு மணலை எடுத்து இரண்டுபக்கத்து கரைகளையும் உயர்த்தவேண்டும். அப்படிஉயர்த்தினால்தான் மேற்படி ஆற்றில் போதுமான ஜலம் வருவதற்கு சௌகரியமாய்இருக்கும்

(4) அனேகவருஷ அனுபோகத்திலிருந்து கொள்ளிடமும், தெற்குராஜன் வாய்க்காலும், பழவாத்துக்கு போதுமான ஜலம் சப்ளை செய்யமுடியாததினால் பழவாற்றிற்கு நேராககாவேரியிலிருந்தே ஜலசப்ளை செய்யவேண்டும்.

வடக்குராஜன் வாய்க்கால், வடவார், பாயும் தென் ஆற்காடு ஜில்லா பிரபலமிராசுதார்கள் பலரும் மேற்படி மிராசுதார்கள் பேட்டியாளும் போது விஜயம்செய்திருந்து, தஞ்சை ஜில்லா மிராசுதார்களுடைய கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக்கொண்டனர்.

சீப் இஞ்சினீர்பதிலளிக்கையில் கோரிக்கையில் கண்ட விஷயமானது தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லாக்களைப்பொருத்த முக்கியமான விஷயம் என்றும், அனேக வருஷகாலமாகதகராறில் இருக்கக்கூடிய மேற்படி விஷயமானது இரண்டு ஜில்லாக்களுக்கும் திருப்திகரமாக சீக்கிரத்தில் முடியும் என்று

(இதன் தொடர்ச்சி 54வது பக்கம் பார்க்க)

## பாரத் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி,

லிமிடெட், ஹெட் ஆபீஸ்:— லாகூர்.

1896ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

———:x;———

(**Four Fold Benifit scheme a speciality.**)

நான்குவித லாபங்கள் தரக்கூடிய விசேஷ பாலிஸிகள் கொடுக்கப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பிராஞ்சு செக்ரிடரி,
மதுரை.

N. S. வெங்கிடாச்சாரி,
சீப் ஏஜண்டு, காவேரிக்கரைத்தெரு, கும்பகோணம்.

### T. S. கணபதி சாஸ்திரிகளின் ஆயுர்வேத ஔஷதங்கள்.

மஹா பில்வாதிமுதலான லேஹ்யங்கள், தைல வகைகள், பஸ்ம செந்தூரங்கள், ரஸாயனங்கள், கிருதங்கள் முதலிய மருந்துகள் இவ்விடத்தில் சாஸ்திரீயமாக செய்யக்கூடியதாம் இவ்விடத்தில் பச்சிலை மூலிகைகள் அகப்படாததற்கு மலையாளமிருந்து வரவழைக்கப்பட்டுச் செய்ததுமான மருந்துகளை ஆஸ்தீகர்களாயுள்ள நம்நாட்டுப் பிரமுகர்கள் ஒருதடவை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை முதலிய மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்,
T. S. கணபதி சாஸ்திரிகள்,
லெக்ஷ்மி விலாஸ் அக்ரஹாரம்,
கும்பகோணம்.

### ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சொக்கியமாகும். தவிர நீர்க்குத்தல், நீர்எரிச்சல், வெட்டை புண், வயறுகடுப்பு, இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத் தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகிக்கக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4

### அஷ்டகுல்ம ஸர்வரோக நிவாரண பௌவன லேகியம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1க்கு ரூபா 4—0—0

### நேத்திரானந்தத் தைலம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1க்கு ரூபா 4—0—0


குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகாவியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்ட்.





### இனும்! டேபிள் டைம்பீஸ் இனும்!! இனும்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனுமாகச்சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுக்கள் விலை ரூபா 7—8—0.


தபாற்கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு சேயர்கள் இதற்கு 8—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A, பீட், ஜி. டி. மதராஸ்.

### டிடக்டாஸ்.
அல்லது
### துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்துகொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத்தெரியாமல் உம்மைப் பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப் பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய், ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டுபிடிக்கலாம்.




இத்துடன் பல கலர்களால் தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன் பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம், ஜி. டி. மதராஸ்.

### நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின்பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (Wire) உதவியால் திறக்கவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும் பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்து அனுப்பப்படும்.



குறைந்தவிலை ரூ. 4—8—0 தபாற்கூலி வேறு.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A, பீட், ஜி. டி. மதராஸ்.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

இதன் முதலிரண்டு பதிப்புகளின் 5000 பிரதிகள் இரண்டே மாதங்களில் செலவாகிவிட்டன.

### இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றும் பதிப்பு வெளிவந்துவிட்டது.

உயர்ந்த காகிதம்! கோர்த்தியான அச்சு!!

அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்

விலை ரூபா 2

இந்நூலில் அடங்கியுள்ள சில முக்கிய விஷயங்கள்.

இல்வாழ்க்கை ஏன் சிறந்தது? இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி? பெண்ணின் பெருமை, பெண் கல்வி, ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடக்கின்றன? காதல் என்றால் என்ன? மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது? கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது? தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது? ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? தாசிகள் நாட்டிலே இருப்பது நன்மையா, தீமையா? ஸ்திரீ ரோகங்கள் முதலியவைகளிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்வது? இன்னும் அநேக ரகசியங்கள் அடங்கியிருக்கின்றன.

எச்சரிக்கை:-எங்கள் புஸ்தகம் நன்றாகச் செலவாகிறதென்று கண்டு அநேகர் பெயரைச் சிறிது மாற்றிப் பல போலிப் புத்தகங்களைத் தயாரிப்பதாய்த் தெரிகிறது. ஆகையால் நண்பர்கள் புஸ்தகம் வாங்கும்போது "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" "வாஸன் புத்தகசாலை" என்ற பெயர்கள் புஸ்தகத்திலிருக்கிறதா வென்று பார்த்து வாங்குங்கள். ஏமாறவேண்டாம்.

வாஸன் புத்தகசாலை,
தபால் பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

## ஜோதிடபலன்.

1928-ம் வருஷம் ஜெனவரிமீ முதல் 1929-ம் வருஷம் ஜனவரிமீ வரையில் உங்களுக்கு நடக்கப் போகும் பலன்களை ஜோதிடசாஸ்திர முறைப்படி எழுதப்பட்டு இங்கிலீஷ் பாஷையில் அச்சிடப்பட்டிருப்பதால் தேவையானவர்கள் அவரவர்கள் ஜனனகால வருஷம். மாதம், தேதி அல்லது ஜன்ம நக்ஷத்திரம் தெரிவித்தால் ஷைபுஸ்தகத்தை தபால் வி. பி. உள்பட ரூ. 1-4-0க்கு அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர்,

இந்தியன் மாடர்ன் அஸ்டிராலாஜிகல் ஹோம்,

விழுப்புரம்.



சி. சாமி அண்டு சன், வயலட் காபியிங் பென்சலை உபயோகியுங்கள்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் உண்மை விளங்கும்.

ஸி. சாமி அண்டு சன்,

ஜெனரல் மர்ச்செண்ட் & அக்கவுண்ட் புக் மேக்கர்ஸ்,

நெ. 242 சைனுபஜார் ரோட் G. T. மதறாஸ்.





## Balachandra Tooth Powder.

### பாலச்சந்திர பற்பொடி.

**20-வருஷகாலமாய் பிரசித்தி பெற்றது.**

கஸ்தூரிபஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும் காட்டிக் ஆஸிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து அநேக சரக்குகளைக்கொண்டு மிகுந்த பிரயாசையுடன் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அநேக கனதனவான்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், முதலானவர்களால் நன்குமதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருக்கிறது.




பல் ஊற்றையை போக்கும்,
பல்லை வெளுப்பையாக்கும்.
பல்வலியை தீர்க்கும்.
பல்ஆட்டத்தை நிறுத்தும்.
வாய் நாற்றத்தை தொலைக்கும்.
பரிமள வாசனையை கொடுக்கும்.
பல்லிலுள்ள கூச்சத்தை நிவர்த்திக்கும்.
பல்லை கெட்டிப்படுத்தும்.
பல்லில் ரத்தம்வராமல் தடுக்கும்.

பல் சம்மந்தமாய் உள்ள சகல வியாதியையும் போக்கி பல்லை நிலை நிறுத்தக்கூடிய அருமையான குணங்களடங்கியதும் சுமார் 3-மாசத்துக்கு உபயோகிக்கக்கூடியதுமான டப்பி 1-க்கு அணா 3-தான்.

ஜாஸ்தி லாபத்தை அபேக்ஷிக்காமல் விலை உயர்ந்த சாமான்களைக்கொண்டு அருமையாய் தயார்செய்யப்பட்டிருக்கிற இந்த பாலசந்திர பற்பொடியை சிறுவர்கள் முதல் ஆண் பெண் சகலமானவர்களும் உபயோகித்து குணமடைவதுடன் இச்சிறு கைத்தொழிலையும் ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வியாதி வந்தபின் வைத்தியனை தேடுவதைவிட வியாதியே வராமல் தடுப்பதுதான் முக்கியமானது.

| | |
|---|---|
| டப்பி 1-க்கு | 0—3—0 |
| டப்பி 6-க்கு தபால் சார்ஜ் உள்பட | 1—4—0 |
| டப்பி 12-க்கு Do | 2—4—0 |

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், கிராமானுகூலன்

மருதாந்தநல்லூர், திப்பாராஜபுரம் போஸ்டு.

மணத்தின் ஊற்று ! வாசனையின் வித்து !!

# பரிமளப் பொக்கிஷம்

ஏது ?

கும்பகோணம் பெரியகடை வீதி

**K. அப்துல் ரகிமான் ஸாஹிப் & ஸன்ஸ்,**

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம் வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. எமது பரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்திபெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப் பொருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம் [கேட்லாக் இனாம்]

கவனியுங்கள்! போலி சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள்!!

# தென்னிந்தியா நெசவுசாலை,

## கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறாக்கள் ஷை நெசவு சாலையில் தயாராகின்றன. மேற்கண்ட **S. R. S.** டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், **S. R. S.** டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

**S. R.** சுந்தரமய்யர்,
புரோப்ரைட்டர்.


Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiyer at Kumbakonam